REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒகஸ்ட் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 192 | Tuesday 15, August, 2023 | 16 பக்கங்கள் | 50/-

UNLIMITED DATA
ரூ.444/-
#170#
3 Apps
ரூ.444/-
TRIPLE BUDDY
SLTMOBITEL

## வங்கி வட்டி வீதங்கள் விரைவில் ஒற்றை இலக்கமாக மாறும்

### ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல கருத்து



இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டிவீதங்களை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர முடியும் என ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சிறு, நடுத்தர உரிமையாளர்கள் மீண்டும் வலுப்பெறுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் 06

### அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து

## பக்தர்களின் நலன் கருதி ஸ்ரீமகா போதிவரை பஸ் சேவை

### விகாராதிபதியிடம் அமைச்சர் பந்துல உறுதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியை தரிசிப்பதற்கு ரயிலில் செல்லும் பக்தர்களுக்கு ரயில் நிலையத்திலிருந்து மகாபோதிக்கு செல்வதற்கான விசேட பஸ் சேவைகளை பெற்றுத் தருவதாக 06

## மடு மாதா திருத்தலத்திற்கு ஜனாதிபதி இன்று விஜயம்

### ஆவணி மாத திருப்பலியில் கலந்து கொள்வார்



மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று மன்னாருக்கு விஜயம் செய்கிறார். மன்னாருக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி இன்று நடைபெறவுள்ள திருப்பலியிலும் கலந்து கொள்கிறார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் மடு திருத்தல விஜயத்தை ஒட்டி மடு திருத்தலத்தில் 06

### வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற சுமார்

# 25,000 குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின்சாரம்

### விரைவாக திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

**500 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி 650 மில். அமெரிக்க டொலர்களில் திட்டம் வகுக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

குறைந்த வருமானம் கொண்ட 25 ஆயிரம் குடும்பங்களுக்கு சூரிய சக்திமின்சாரத்தை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இத்திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதுடன் தேசிய மின் இணைப்புக்கு 500 மெகா வோட் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திட்டத்தை 06



### மும்பை பேராயர் மாளிகையில் நேற்றைய தினம்

## இலங்கையின் திருத்தூதர் புனித ஜோஸப் வாஸின் உருவப்படம் திறந்து வைப்பு



இலங்கையின் திருத்தூதர் புனித ஜோசப் வாஸின் உருவப்படம் மும்பை பேராயர் மாளிகையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. மகாராஷ்டிர மாநிலத்திற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் 06



03

### சுற்றுலா பயணிகளின் வருகையில் பெரும் அதிகரிப்பு

வருமானம் 1 பில். டொலர்களை தாண்டியது

## பாகிஸ்தானின் 76ஆவது சுதந்திர தினம்



பாகிஸ்தானின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று (14) கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் ஞாபகார்த்த கேக்கை உயர்ஸ்தானிகர் சிறுவர்கள் சகிதம் வெட்டுவதையும் படத்தில் காணலாம். (படம் அஷ்ரப் ஏ சமத்)

### 05ஆம் ஆண்டு புலமைப் பரிசில்;

## விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும் திகதி செப். 01

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

இவ்வாண்டு 05ஆம் ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்படவுள்ள பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பிக்கும் திகதியை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கிணங்க அதற்கான விண்ணப்பங்களை செப்டெம்பர் 01ஆம் திகதி வரை ஒன்லைன் மூலம் 06

## ரூ.1,80,000 மில். திறைசேரி உண்டியல்கள் நாளை ஏலத்தில்

### இலங்கை மத்திய வங்கி நேற்று அறிவிப்பு

ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், நாளை ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. அதன்படி 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 06



03

சட்டத்தை கடுமையாக்குவதே ஒரே வழி;

### போதைக்கு அடிமையாவோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு

## வெளிநாட்டு போலி முகவர் மட்டக்களப்பில் கைது

### 22 பேரிடம் தலா 4,50,000 பண மோசடி



வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்கு அனுப்புவதாக ஒருவரிடம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 22 பேரிடம் பணமோசடி செய்த மட்டக்களப்பு, அமிர்தகழி பிரதேசத்திலுள்ள போலி முகவர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் இருந்து வந்த வேலைவாய்ப்பு பணியகத்தினரால் 06

### அத்தியாவசிய பராமரிப்பு பணி;

## கண்டி - மாத்தளை ரயில் சேவை மூன்று தினங்களுக்கு இல்லை



கண்டிக்கும் மாத்தளைக்கும் இடையிலான புகையிரத சேவை எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவு முதல் 21ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை இடைநிறுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. கண்டிக்கும் 06

## IMF உடனான இரண்டாவது சுற்று பேச்சு செப். 11 இல்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் மாதம் 11 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்தமுக்கியமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்த காலப்பகுதியில் நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளது. 06

## ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு 17ஆம் திகதி கூடும்

### கட்சியின் 77ஆவது சம்மேளனம் குறித்து ஆராயும்

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு எதிர்வரும் 17ஆம் திகதி கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் கட்சியின் 77 ஆவது 06

### ஆட்டோ சாகசத்தை வீடியோ எடுத்த

## இளைஞர் ஒருவர் மின் கம்பத்தில் மோதி பலி

மற்றொருவருக்கு படுகாயம்



ஆட்டோ வண்டி ஓட்டப்பந்தயத்தை காணொளி பதிவு செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் மின்கம்பத்தில் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளதாக 06

## பம்பலபிட்டியில் பஸ்ஸூம் லொறியும் மோதி விபத்து

### பஸ் புரண்டதில் 07 பேருக்கு படுகாயம்



*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவில் டுப்ளிகேஷன் வீதி ஜூபிலி புல்லர்ஸ் சந்திக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் எழுவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக 06

## சீன கடல்சார் ஆராய்ச்சி கப்பல் இலங்கை வருகிறது

### ஒருமாத காலம் இலங்கையில் தரித்து நிற்கும்



சீன கடல்சார் ஆராய்ச்சிக் கப்பலான ஷி யான் 6 (Shi Yan 6) எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் இக்கப்பல் கொழும்பு துறைமுகம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒக்டோபர் மாதம் 06

### எமக்கு உங்களது உதவி தேவை;

## இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்

**– பருத்தித்துறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்**



யாழ்ப்பாணம் – பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# கொழும்பில் 76ஆவது பாகிஸ்தான் சுதந்திர தின நிகழ்வுகள்










பாகிஸ்தானின் 76ஆவது சுதந்திர நிகழ்வுகள் நேற்று (14) கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் விசேட செய்திகளும் வாசிக்கப்பட்டன. இந்நிகழ்வில் இலங்கையில் வாழுகின்ற பாகிஸ்தான் நாட்டவர்கள் பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்ததோடு உயர்ஸ்தானிகரினால் சுதந்திர தின விசேட கேக்கும் வெட்டப்பட்டது.
(படங்கள் ; அஷ்ரப் ஏ சமத்)



ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட விற்பனை முகாமையாளர் திரு. கசுன் வெலரத்ன மற்றும் அந் நாட்டு முகாமையாளர் திரு. தம்மிக்க குலதுங்க ஆகியோர் சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரனை அண்மையில் சந்தித்தபோது...

## வரட்சியான காலநிலைக்கு மத்தியில் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரிப்பு

தற்போது நிலவும் வரட்சியான காலநிலைக்கு மத்தியில் "எலிக்காய்ச்சல்" எனப்படும் லெப்டோஸ்பிரோசிஸ் பரவல் அதிகரிப்பதை இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டி எச்சரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் நபர்கள் குறிப்பாக, மீனவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் ஹிரிபிட்டிய வில் அமைந்துள்ள ரொடரட்ட வாவியில் நீராடிய இரு இளைஞர்கள் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்ததையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## தொடங்கொடையில் குடும்பஸ்தரொருவர் தாக்கப்பட்டு கொலை

**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை தொடங்கொடையில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று (14) காலை நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்

தொடங்கொட, தொலேலந்த பிரதேசத்தில் வசித்து வந்த மாத்தறை ஆராச்கே பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய திமுத் சாமிக்க என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் வீடு திருத்தப்பட்டு வரும் நிலையில், மனைவி மற்றும் ஒரே குழந்தையுடன் மனைவி வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதிகாலை 2.30 மணியளவில் வீட்டின் முன் மற்றும் பின்புறக் கதவுகளை உடைத்து கொண்டு உள்ளே நுழைந்த சந்தேக நபர்கள் கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நிலையில் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தற்போது பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் தொடங்கொடை பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

## தேசிய ஊழியர் சங்க தொழிற்சங்க அலுவலகம் திறப்பு




இலங்கை துறைமுக அதிகார சபையின் காலி தேசிய ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க அலுவலகம் (11) திறந்து வைக்கப்பட்டது.

துறைமுக தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவர் திருமதி துஷாரி பிரியங்கவின் தலையீட்டில் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு புதிய வசதிகளுடன் கூடிய கட்டடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் லக் வனிதா சங்கத்தின் தலைவி திருமதி சாந்தினி கோங்கஹகே, தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய ஊழியர் சங்கத்தின் உப தலைவர் சுனில் டி சில்வா, இலங்கை துறைமுக தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவர் திருமதி துஷாரி பிரியங்கா, சிவில் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## தென் மாகாண தமிழ் மொழித்தின போட்டி

**(வெலிகம தினகரன் நிருபர்)**




அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாண மாத்தறை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் மாத்தறை தாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் மஷாஹிர் (நளீமி) தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வுகள் வெகு விமர்சையாக நடைபெற்றதாக விழா குழு செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

## கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூமில்; நீண்டகால ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க கோரி ஆர்ப்பாட்டம்



**அநுராதபுரம் மேற்கு , அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்**

அநு., கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி அநுராதபுரம் வடமத்திய மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்திற்கு முன்னால் பாடசாலையின் மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி பாடசாலையில் நீண்ட நாட்களாக நிலவும் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வினை பெற்றுத்தருமாறு வலியுறுதியே இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றது. வடமத்திய மாகாண ஆளுநர் உள்ளிட்ட கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு பல முறை எழுத்து மூலம் அறிவித்தும் எந்தவித தீர்வும் கிடைக்காத பட்சத்திலேயே மாணவர்கள், பெற்றோர்களால் மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 15 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# நுரைச்சோலை அனல் மின் நிலைய திருத்தப் பணிகள் நிறைவு

## நாளை முதல் மீண்டும் 270 மெகாவோட் தேசிய மின் இணைப்புக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்த இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் நாளை முதல் அதன் மூலம் 270 மெகாவோட் மின்சாரத்தை மீண்டும் தேசிய மின் இணைப்புக்கு வழங்க முடியும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி மின் பிறப்பாக்கி கடந்த 8ஆம் திகதி தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்ததுடன் அதன் மூலம் தேசிய மின் இணைப்புக்கு பெற்று வந்த 270 மெகாவோட் மின்சாரம் இழக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் கடும் வரட்சி நிலையிலும் தென் மாகாணத்திற்கு தடையின்றி தொடர்ச்சியாக மின் விநியோகத்தை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் அதற்காக சமனலவெவ மின் உற்பத்தி நிலையத்தை இயல்பு நிலையில் பேணுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் சமனலவெவ நீர் மட்டம் பெருமளவில் குறைவடைந்துள்ளமை பெரும் சவாலாகும் அந்த வகையில் எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தென் மாகாணத்துக்கு வழங்க முடியுமானால் தனியார் துறையிடம் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் வராது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, கண்டி எசல பெரஹெரவுக்கு எவ்வித தடையும் இன்றி தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கான கட்டணத்தை அரசாங்கம் வழங்க வுள்ளதாகவும் அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது.

# கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டாலும் தவணைகளை 2048 வரை செலுத்த நேரிடும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளாமல் நாடு ஒரு மாதம் கூட இயங்க முடியாது. எனவே, அரசு, நட்பு நாடுகள், சர்வதேச அமைப்புகள், ஆலோசனை நிறுவனங்களுடன் இணைந்து, இதற்கு தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

06

வெளிநாட்டு பயிற்சிகளை முடித்து நாடு திரும்பிய

# 263 விசேட மருத்துவர்களில் 120 பேர் எவ்வித அறிவிப்பும் இன்றி மீண்டும் வெளிநாட்டுக்கு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடந்த ஒன்றரை வருட காலத்தில் வெளிநாட்டு பயிற்சிகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய 263 விசேட மருத்துவர்களில் மயக்கவியல் விசேட டாக்டர்கள் 11 பேர் உள்ளிட்ட விசேட மருத்துவர்கள் 120 பேர் எந்த அறிவித்தலுமின்றி மீண்டும் வெளிநாடு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருட காலங்களில் 29 மயக்கவியல் விசேட மருத்துவர்கள் வெளிநாட்டு பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய நிலையில் அவர்களில் 11 பேர் எந்த அறிவிப்பும் இன்றி மீண்டும் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி டாக்டர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்குவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதியை செலவழிக்கின்றது. அந்த வகையில் முழுமையான புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு 15 மில்லியன் ரூபாவும் அரை புலமைப் பரிசில் பெற்றுக் கொள்ளும் மருத்துவர்களுக்கு 8 மில்லியன் ரூபாவையும்

06

# அரிசி தட்டுப்பாடு ஏற்படுமா? ஆராய்ந்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும்

## அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடும் வரட்சி காரணமாக பெருமளவில் நெற்பயிர்ச்செய்கைகள் பாதிப்படைந்துள்ள நிலையில் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுமா என்பதை ஆராய்ந்து தமக்கு அறிவிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்ந்து ஒருவார காலத்துக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சர் விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் சிறுபோக பயிர்ச்செய்கை நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பாதிப்படையுமானால் மேலும் சில மாதங்களுக்கு நாட்டில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அந்த அதிகாரிகள் அமைச்சருக்கு சுட்டிக்காட்டியுள்ளனர். எவ்வாறாயினும் நாட்டில் நிலவும் வரட்சியை காரணமாக வைத்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு அதிகாரிகள் முயற்சிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலா பயணிகளின் வருகையில் பெரும் அதிகரிப்பு

## வருமானம் 1 பில். டொலர்களை தாண்டியது



இலங்கையின் சுற்றுலா வருமானம் (2023ஆம் ஆண்டில்) 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் காட்டுகின்ற அதேவேளை, ஆகஸ்ட் மாதத்தின் முதல் 10 நாட்களில் 51,594 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகஸ்ட் மாதத்திலும் 9,146 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றது.

இதேவேளை, ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,939 பேரும், சீனாவிலிருந்து 3,707 பேரும், பிரான்சிலிருந்து 3,249 பேரும், ஜேர்மனியிலிருந்து 3,155 பேரும், ரஷ்யாவிலிருந்து 2,385 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஜூலை மாதத்தில் மொத்தம் 143,039 சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும் அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 819,507 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கிறது.

# கடும் வரட்சி காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நீரை பாவிக்கவும்

## நீர் வழங்கல் சபை பொதுமக்களிடம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதுடன் நீர் உபயோகமும் அதிகரித்துச் செல்லும் நிலையில் நீரை சிக்கனமாக பாவிக்குமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

குறிப்பாக பொதுமக்கள் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியமான தேவைகளுக்கு மாத்திரம் நீரை உபயோகிக்குமாறும் அந்த சபை கேட்டுக்கொண்டுள்ளது. அதுதொடர்பில் விசேட அறிவித்தலொன்றை விடுத்துள்ள மேற்படி சபை நாட்டில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக மக்களுக்கு தேவைப்படும் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்வதற்காக சில பிரதேசங்களுக்கு குறைந்தளவு நீரே விநியோகிக்கப்படுவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் நீர் விநியோகத்தின் போது குறைந்தளவிலேயே நீரின் அழுத்தம் காணப்படுவதாகவும் எவ்வாறெனினும் மக்கள் எதிர்நோக்க நேர்ந்துள்ள அசௌகரியங்கள் தொடர்பில் நீர் வழங்கல் சபை தமது கவலை தெரிவித்துக் கொள்வதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

முடிந்தளவு குறைவான நீரை அன்றாடம் பாவனைக்கு எடுத்துக் கொள்ளுமாறும், வாகனங்களைக் கழுவுதல், வீட்டுத் தோட்டங்கள் உள்ளிட்ட மிகவும் அத்தியாவசியமற்ற செயற்பாடுகளுக்கு குறைந்தளவு நீரை உபயோகிக்குமாறும் முடிந்தால் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நீரை பாவிப்பது சிறந்தது என்றும் அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது.

சட்டத்தை கடுமையாக்குவதே ஒரே வழி;

# போதைக்கு அடிமையாவோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு

## பல பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துவதில் சிக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாவனையுடன் தொடர்புடையவர்கள் அதிகரித்துக் காணப்படும் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கை முறையாக முன்னெடுப்பதற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அவ்வாறான பிரதேசங்களில் பாரிய சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதாகவும் அத்தகையோர் தொடர்பில் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தாம் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் பிரிவானது சமூகத்திலிருந்து போதைப் பொருளை முற்றாக ஒழிப்பதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. பொலிஸாருக்கு கிடைக்கும் தகவல்களையடுத்து உடனடியாகவே சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் அதிக ஒத்துழைப்பு மிக அவசியமாகும். சில பிரதேசங்களில் பெருமளவிலான போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்கள் வாழ்கின்ற நிலையில் அந்தப் பிரதேசங்களில் நீதியை நிலைநாட்டுவதில் பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.திருட்டு, வீடுகளை உடைத்து கொள்ளையடித்தல், வாகனங்களைக் களவாடுதல் அத்துடன் வீடுகளில் ஏற்படும் வன்முறைகளுக்கும் போதைப்பொருள் பாவனையே முக்கிய காரணமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர் நியமனம்

**ஸாதிக் ஷிஹான்**

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் சேனக பியன்வில நியமிக்கப்பட்டுள்ளார்.எயார் வைஸ் மார்ஷல் பியன்வில நேற்று (14) பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

முன்னாள் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ரஞ்சன் லமாஹேவகே அவர்களின் வெற்றிடத்திற்கு எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் சேனக பியன்வில நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






# டாக்டர்களுக்கான தட்டுப்பாடு தொடருமானால் வெளிநாட்டு டாக்டர்களை அழைக்க நேரும்

## விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மருத்துவர்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்காலத்திலும் எதிர்கொள்ள நேரிட்டால் வெளிநாட்டு டாக்டர்களை சேவைக்கு அழைக்க நேரும் என விசேட மருத்துவர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் அசோக குணரத்ன தெரிவித்துள்ளார்.

விசேட மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில் வைத்தியசாலைகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர்,

டாக்டர்கள் நாட்டை விட்டு வெளிநாடு செல்வதற்கான முக்கிய காரணம் அரசாங்கத்தின் கடும் வரிக் கொள்கையாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர் அத்துடன் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியும் அதற்கான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், சில தரப்பினர் கூறுவது போல் டாக்டர்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்குச் செல்வது உத்தியோகபூர்வ வீடுகள் இல்லாததால் அல்ல அதற்கு மாறாக அரசாங்கத்தின் கடுமையான வரிக்கொள்ளை மற்றும் நாட்டில் நிலவும் நிலையில்லாத

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்

ஒருவரின் வாழ்க்கைக்கு ஒளிதருவது ஊக்கமே யாகும். ஊக்கமின்றி உயிர்வாழ்வது இழிவு தருவதாகும்.

# தண்ணீரை வீண்விரயமின்றி பயன்படுத்த வேண்டிய காலம்!

நாட்டுக்கு உரிய மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதில் தாமதம் நிலவி வருகின்ற சூழலில், வெப்பநிலையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நிலையில் வரட்சியான காலநிலை ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் எல்லா உயிரினங்களும் உணர்ந்த வண்ணமுள்ளன.

நீரானது உலகில் காணப்படும் உயிரினங்கள் அனைத்திலும் நீர்மவடிவில் காணப்படுகிறது. உயிரினங்களின் உடலுக்கு ஆற்றலையோ, ஊட்டச்சத்துக்களையோ நீர் வழங்குவதில்லை. ஆனால் உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு நீர் அத்தியாவசியம். நீரின்றி உயிரினங்கள் உயிர் வாழ முடியாது. அது சாத்தியமற்றது.

இந்நிலையில் இந்நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மழைவீழ்ச்சி தாமதத்தினால் உருவாகியுள்ள வரட்சியால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எல்லாத் தரப்பினரும் அதன் முக்கியத்துவம், தேவை குறித்து கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வரட்சிக் காலநிலை தோற்றுவித்துள்ள பாதிப்புக்களையும் தாக்கங்களையும் உணரக்கூடிய நிலைமையும் உருவாகியுள்ளது.

இவ்வரட்சி காலநிலையினால் நீர்த்தேக்கங்களிலும், குளங்கள் ஆறுகளிலும், நீரேந்து பிரதேசங்களிலும் நீர்மட்டம் குறைவடைந்து வருகின்றது. அதன் விளைவாக விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, கால்நடைகளும் வனவிலங்குகளும் கூட நீரைப் பெற்றுக்கொள்வதில் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளன.

குறிப்பாக வனாந்தரங்களில் உள்ள பெரும்பாலான நீரேந்து பிரதேசங்களிலும் குளங்களிலும் நீர்மட்டம் பெரிதும் குறைவடைந்துள்ளது. அதனால் வனவிலங்குகள் நீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளன.

இதேவேளை மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருவதால் நீர் மின்னுற்பத்தியிலும் வீழ்ச்சியில் மாத்திரமல்லாமல் மின் வழங்கலில் தாக்கங்களும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இவ்வரட்சிக் காலநிலையினால் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்நிலையத்தின் தரவுகளின்படி, 49,765 குடும்பங்களைச் சேர்ந்த 62,744 பேர் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களில் பெரும்பகுதியினர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அதேநேரம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல், மட்டக்களப்பு, அம்பாறை, இரத்தினபுரி, பதுளை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் குடிநீரைப் பெறுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். ஆனாலும் தற்போதைய சூழலில் நாட்டின் பல பிரதேசங்களிலும் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த வண்ணமுள்ளனர்.

இவ்வாறான சூழலில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தற்போதைய வரட்சிக் காலநிலையினால் 18 பிரதேச மத்திய நிலையங்களுக்கு நீர் வியோகிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதோடு, நாட்டிலுள்ள 344 நீர் விநியோக மத்திய நிலையங்களில் 32 நீர் விநியோக மத்திய நிலையங்கள் அபாய மட்டத்தில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், 'பருகுதல் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறெதற்கும் தண்ணீரைப் பயன்படுத்தி வீண் விரயம் செய்ய வேண்டாம்' என்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது காலத்திற்கு அவசியமான வேண்டுகோள். இன்றைய காலகட்டத்தில் தண்ணீரின் பெறுமதியை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கின்றது. ஏனெனில் தற்போதைய வரட்சிக் காலநிலையினால் மனிதன் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் இந்நாட்டில் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இருப்பினும் தண்ணீரின் பெறுமதியையோ முக்கியத்துவத்தையோ உணராதவர்களாகச் செயற்படக்கூடியவர்களும் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர். அவ்வாறானவர்களை பரவலாகக் காணக்கூடியதாகவும் உள்ளது. குறிப்பாக வாகனங்களை கழுவுதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளுக்காகவும் தண்ணீர் வீண்விரயம் செய்யப்பட்டு வருவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆனால் தண்ணீர் வீண் விரயம் செய்யப்படுவதற்கான காலம் அல்ல இது என்பதை ஒவ்வொருவரும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அதனைத் தவிர்ப்பதை தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருதி செயற்படுவது இன்றியமையாததாகும். மழை பெய்வதற்கான அறிகுறிகளை தற்போது காண முடியவில்லை. அடுத்த மாதத்திலேயே நாட்டில் மழை பெய்யுமென்று எதிர்வு கூறப்படுகின்றது. அதுவரை நாட்டு மக்கள் அனைவரும் தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இம்தியாஸ் எம்.பி எழுதிய 'சிந்திப்போம்' நூல் வெளியீடு

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதிய 'சிந்திப்போம்' எனும் சிங்கள மொழி மூலமான நூல் வெளியீட்டு வைபவம் கொழும்பு 7 இல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சிச் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சர்வமதத் தலைவர்கள், பாரளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் நண்பர்கள், பேருவளை தொகுதி ஆதரவாளர்கள், குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





இந்நூல் பற்றிய விமர்சன உரைகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அத்துலசிறி சமரக்கோன், சிரச சிரேஷ்ட ஊடகவியலாளர் சந்தன சூரியபண்டார, இளம் ஊடகவியலாளர் ஹரிந்து உடுவரகெதர ஆகியோர் ஆற்றினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நூலாசிரியர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உரையாற்றுகையில்,

"கடந்த ஐந்து வருடகாலமாக இலங்கையில் வெளிவரும் தேசிய சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்த இனஐக்கியம், ஏனைய நாடுகளுடன் இலங்கையின் ஒப்பீடுகள், இளம் சந்ததிகள், நாளைய தலைவர்கள், நற்சிந்தனை, தேசிய நல்லிணக்கம் தொடர்பான கட்டுரைகளை தொகுத்து இந்நூலை வெளியிட்டுள்ளேன்.





இந்நூல்களை 50 வீத விலைக்கழிவில் கொடகே நிறுவனர் அச்சிட்டுத் தந்துள்ளார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலை விட மேலும் ஓர் நூல் எழுதுகின்றேன். அதில் எனது அரசியல் பயணம் மற்றும், பாடசாலை நினைவுகள், பல்கலைக் கழகம், வாழ்க்கை, சட்டக் கல்லூரி, அரசியல் நண்பர்கள் தொடர்பான அனுபவங்களை எழுதுகின்றேன். அந்நூல் அடுத்த மாதமளவில் வெளியிடப்படும். ஏற்கனவே ஐந்து நூல்கள் வெளியிட்டுள்ளேன்" எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழ், முஸ்லிம் நண்பர்கள், ஆதரவாளர்களுக்காக எனது நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் முயற்சி செய்கின்றேன்" என்று அவர் மேலும் கூறினார்.

**(தெஹிவளை–கல்கிசை விசேட நிருபர்)**

## சர்வதேச இளைஞர் தினம்:

# USF ஸ்ரீலங்கா அமைப்பின் இளைஞர் செயலமர்வு

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு USF Sri Lanka அமைப்பினால் இளைஞர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும், அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான அ.கபூர் அன்வர் நெறிப்படுத்தலில் அமைப்பின் தவிசாளர் ஏ.எம். சஹ்றான் தலைமையில் 'சமூக அபிவிருத்தியில் இளைஞர்களின் வகிபாகம்' எனும் தொனிப்பொருளில் ஒருநாள் செயலமர்வு சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் வரிசைப்படுத்தல் படையின் திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளரும், ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயலாளருமான றிஸ்கான் முகம்மட் கலந்து கொண்டார்.

ஏனைய அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் மாவட்ட உதவிப் பணிப்பாளர் SMA லத்தீப் மற்றும் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஹமீர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வின் வளவாளராக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பாலியல் நோய்ப்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.என்.எம். தில்சான் கலந்து கொண்டு 'தற்கால இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அதனை வெற்றி கொள்வது எவ்வாறு?' என்பது பற்றி இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் பயனுள்ள கருத்துக்களை முன்வைத்தார்.









பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட றிஸ்கான் முகம்மட் அவர்களுக்கும், வளவாளராக கலந்து கொண்ட வைத்தியர் எம்.என்.எம். தில்சான் அவர்களுக்கும் USF SriLanka அமைப்பினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஆலிம்நகர் ஈச்சம்வட்டி பள்ளி தர்காவின் 113 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் நிகழ்வுகள்

அக்கரைப்பற்று – அம்பாறை வீதியில் அமைந்துள்ள ஆலிம்நகர் கிராமத்திலிருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் வயல் பிரதேசத்திற்கு மத்தில் கம்பீரமாக உயர்ந்த நான்கு பிரதான மணாராக்களைக் கொண்டுகாட்சியளிக்கும்ஒருவணக்கத்தலமே ஈச்சம்வட்டி பள்ளி தர்காவாகும்.

அங்கு அடங்கப்பட்டுள்ள அஷ்செய்யிது ஷெய்கு அப்துல் காதர் வொலியுல்லாஹ் (ரலியள்லாஹு தஆலா அன்ஹு) மற்றும் அஸ் செய்யிது சேய்கு அப்துல் ரஹுமான் வொலியுல்லாஹ் (ரலியள்லாஹு தஆலா அன்ஹு) ஆகியோரின் பேரில் ஆண்டுதோறும் கத்தமுல் குர்ஆன், மௌலீது மஜ்லிஸ், கந்தூரி வழங்கல் மற்றும் ரிபாய் ராதிப் மஜ்லிஸ் வைபவங்கள் நடைபெறுவது வழக்கம்.

இம்முறை நூற்றுப்பதின்மூன்றாவது ஆண்டை நினைவு கூரும் நிகழ்வுகள் சென்ற வாரம் மிகச்சிறப்பாக தர்காவின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எம்.ஏ அஜீர் தலைமையில் நடைபெற்றன. கடந்த வருடம் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நடைபெறாதிருந்த இந்நிகழ்வுகள் இவ்வருடம் மிகவும் சிறப்பாகவும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடனும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பொதுமக்கள் தமது முழு ஒத்தாசையையும் வழங்கியிருந்தனர்.





ஆரம்ப நிகழ்வாக கத்தமுல் குர்ஆன் ஓதும் நிகழ்வும் மௌலீது மஜ்லிசும் மௌலவி உதுமாலெவ்வை முஹம்மது ஹசன் (மன்பஈ ) தலைமையில் பெருந்தொகையான மௌலவிமார் உலமாக்கள் மத்தியில் நடைபெற்றன. பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மார்க்கப்பிரசங்கம் கல்முனை தாருஸ் சபா டிவி பணிப்பாளர் மௌலவி எ.ஆர்.சபா முஹமத் (நஜாஈ) அவர்களால்நிகழ்த்தப்பட்டது. நிகழ்வின் முக்கிய அம்சமாக கந்தூரி வைபவம் தலைவர் எம்.ஐ அஜீர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருந்தொகையான ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.



கொடியேற்றும் நிகழ்வு மேல்சபை உறுப்பிப்பினர் சம்சுதீன், பக்கீர் பாவாக்கள் மற்றும் உலமாக்கள் ஊர்ப்பிரமுகர்கள் முன்னிலையில் தலைவர் அஜீரால் நடத்தி வைக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், விசேட அதிரடைப்பிரிவின் சாகமம் நிலைய பொறுப்பதிகாரி எம். ரிஸ்வி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பள்ளிவாசல் முன்றலில் மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மரநடுகை நிகழ்வுகளில் அதிதிகள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். சிறப்பு அதிதிகள் பக்கீர் பாவாக்களின் ரபான் முழக்கத்துடன் வரவழைக்கப்பட்டு பள்ளிவாசல் முன்றலில் அழகிய மரங்கள் நடப்பட்டன.

கந்தூரி நிகழ்வின் விசேட அம்சமாக ரிபாய் ராத்தீப் உதுமாலெவ்வை (கின்தில் அலிசா கலீபா கிலாபத்தின் ரிபாய் அகமதுல் காதிரிய்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பாவாமார்களின் சாகச விளையாட்டுகள் இரவுநேர நிகழ்வாக இடம்பெற்றன.

வருடாந்த கந்தூரி நிகழ்வுகளில் இவ்வூர் மக்களை விடவும் கூடுதலாக வெளியூர் மக்கள் சாரிசாரியாக வந்து கலந்து கொண்டமையால் வீதியெங்கும் வாகனங்களாகவே காட்சியளித்தமை குறிப்பிடத்தக்கது.

**கலாபூஷணம் எம்.ஏ.பகுர்டீன்**
**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

# நிலவை நெருங்கியது சந்திரயான் விண்கலம்!

இந்திய விண்வெளி ஆய்வுநிலையத்தினால் அனுப்பப்பட்ட சந்திரயான் விண்கலம் நிலவை நெருங்கியுள்ளது. நிலவுக்கும் சந்திரயானுக்கும் இடையேயான சுற்று வட்டப்பாதையின் தூரம் 3 ஆவது முறையாக குறைக்கப்பட்டுள்ளது. 1,347 கி.மீ தூரத்தில் இருந்து 177 கி.மீ வரை சந்திரயான் 3 விண்கலத்தின் உயரம் குறைக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ ஜூலை 14ஆம் திகதி பிற்பகல் 2.35 மணியளவில் சந்திரயான்_3 விண்கலத்தை ஏவியது. சந்திரயான் 3 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட நிலையில், அது தனது இறுதி இலக்கினை அடைய பல்வேறு படிநிலைகளை கடக்க வேண்டியிருக்கிறது. அதாவது, நிலவை நோக்கி இந்தியாவின் சாதனைப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் சந்திராயன் 3 விண்கலம் பூமியை நீள்வட்டப் பாதையில் 5 முறை சுற்றி வந்த பிறகு நிலவின் எல்லைக்குச் சென்று அதையும் நீள்வட்டப்பாதையில் சுற்றிவருகிறது.




நிலவின் ஈர்ப்பு விசைப் பகுதிக்குச் சென்றவுடன் சந்திரயான் 3 இன் உயரமானது படிப்படியாகக் குறைக்கப்பட்டு நிலவில் தரையிறக்கும் நடவடிக்கைகளை இஸ்ரோ தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த 6 ஆம் திகதி சந்திரயானுக்கும் நிலவிற்கும் இடையிலான சுற்று வட்டப்பாதையின் உயரம் குறைக்கப்பட்டது.கடந்த 9 ஆம் திகதி இரண்டாவது முறையாக குறைக்கப்பட்ட நிலையில்,மூன்றாவது முறையாக நேற்று சந்திரயான் 3 விண்கலத்திற்கும் நிலவிற்கும் இடையிலான சுற்று வட்டப் பாதையின் உயரம் குறைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி சந்திரயான்3 விண்கலம் 100 கி.மீ வட்ட சுற்றுப்பாதையில் நுழையும். 23 ஆம் திகதி மாலை 5.47 மணிக்கு நிலவில் சந்திரயான் 3 விண்கலம் தரையிறங்கும்.

# மலையகம்-200 நடைபயணத்துக்கு ஆதரவு வழங்கிய திருமலை மக்கள்

**தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, இலங்கையின் காடுகளாய் இருந்த மலையகத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றிய மலையக மக்கள், இன்றும் தங்களுடைய உரிமைகளை பெறுவதற்காக போராடி வருகின்றனர்.**

அவர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் 'மலையகம்_ 200' என்ற தொனிப்பொருளில் நடைபெற்று வருகின்றன.

'மாண்புமிகு மலையகம்' என்ற நடைபயணம் தலைமன்னாரில் இருந்து மலையகம் நோக்கி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது நிறைவுக்கு வந்துள்ளது.



அந்த ஊர்வலத்துக்கு திருகோணமலை பிரதேச மக்களும் ஆதரவு வழங்கினர். அந்த வகையில் திருகோணமலை மாவட்ட சிவில் சமூக ஒன்றியத்தில் பங்கு கொள்ளும் அமைப்புகள் ஒன்றிணைந்து தங்களுடைய பங்களிப்பை நடைபயணத்தில் வழங்கியிருந்தனர்.

அவர்கள் முருங்கன் தொடக்கம் மடு வரையிலான பகுதியை நடந்து கடந்து வந்தனர். இந்த வேளையில் மலையக மக்களின் துயர், அவர்களின் உரிமைப் போராட்டம், வரலாறு தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்கள் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டன.

மடு சந்திக்கு அருகில் உள்ள தேவாலயத்தில் அனைவரும் ஒன்று கூடி, மலைய மக்களின் இன்றைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.

மலையக மக்களின் உரிமைகள், அவர்கள் இன்று எதிர்நோக்கும் சவால்கள், இந்த நடைபயணத்தின் நோக்கம் என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. திருகோணமலை சேர்ந்த அமைப்புகளின் ஒத்துழைப்பு அவர்களுக்கு கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியையும் தெரிவித்தனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட மக்கள் சார்பாக திருகோணமலை மாவட்ட சிவில் சமூகங்களின் கூட்டமைப்பு அறிக்கையை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்காலம் குறித்த நம்பிக்கைகளுடன் இந்தத் தீவை அடைந்த மக்களை சுதந்திரத்தின் பின்பு மாறி மாறி ஆட்சி செய்த அரசுகள் கவனிக்கவில்லை. இந்த நாட்டிற்கு தமது கடும் உழைப்பின் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் மலையக மக்களுக்கு ஆதரவளிப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். 200 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் இந்த நாட்டிற்கு வந்ததில் இருந்து அச்சமூகத்தின் இருப்பு போராட்டமாகவே காணப்பட்டு வருகின்றது. அவர்கள் ஏனைய சக சமூகங்களுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும். ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம் அவசியம்.



**பாலேந்திரலிங்கம் விபூஷிதன்**
**திருகோணமலை**

# அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் கல்வியாளர்கள் மூவருக்கு பாராட்டு விழா

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நீண்டகாலம் கல்விப் பணியாற்றி, சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்கள் இருவர் மற்றும் இடமாற்றம் பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் என மொத்தம் மூவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இவ்விழா விமரிசையாக நடைபெற்றது.







வலயக் கல்வி அலுவலக கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் ஏற்பாடுசெய்த இவ்விழா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.எஸ்.அஹமட் கியாஸ் நெறிப்படுத்தலில், வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்கள் எம்.ஐ.அன்ஸார், எஸ்.எல்.மன்சூர், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.ஜனூபர் ஆகியோரின் பணிகளைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப் பா, நினைவுப் பரிசு, பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பேசுகையில், கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று கல்வி வலயம் முன்னணி வலயமாக மிளிர்வதற்கு பிரதான காரணம் இவ்வலுவலகத்தில் பணியாற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் மகத்தான பணியும், அர்ப்பணிப்பும்தான் எனக் குறிப்பிட்டார்.

"ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் சுமார் 35 வருடகால சேவையை நிறைவுசெய்த எம்.ஐ. அன்ஸார் அவர்கள் முறைசாராக் கல்வி அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பு நல்கினார். ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். எல்.மன்சூர், அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி அபரிமித வளர்ச்சியடைவதற்கு அயராது பாடுபட்டார். உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். ரீ.எம்.ஜனூபர் எதிர்காலப் பணியில் வெற்றிகாண வேண்டும் என வாழ்த்துகின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தியாலய அதிபர் ஏ.ஜி.பஸ்மில், ஆசிரிய நிலைய முகாமையாளர் ஏ.எல்.சமீம், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

**முகம்மட் றிஸான்**
**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

# பிரதீபா - 2023 கிழக்கு மாகாணப் போட்டியில் சாய்ந்தமருது கலாசார மத்தியநிலையம் முதலிடம்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா 2023 போட்டியின் ஓர் அங்கமான மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. இப்போட்டிகளில் 15 இற்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அவற்றில் முஸ்லிம் பிரிவில் 7 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன. கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதன் முறையாகக் கலந்து கொண்டு சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் போட்டியிலும் மற்றும் கனிஷ்ட நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும் கலந்து கொண்டது. இந்த இரண்டு பிரிவுகளில் கோலாட்டம் சிரேஷ்ட நிகழ்ச்சியில் 83 புள்ளிகளைப் பெற்று சாய்ந்தமருது வரலாற்றில் முதலாவதாகக் கலந்து கொண்ட போட்டியிலேயே முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.

அதேபோல் மற்றுமொரு சாதனையாக கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் 73 புள்ளிகளோடு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது. சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு மாத காலப்பகுதியில் இவ்வெற்றிச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இந்த வெற்றியில் கலந்து கொண்ட கோலாட்டப் பிரிவு மாணவர்களான எம். எப்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம்.ஆஸிப், என். ஹம்தி, என்.எம்.இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என்.நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம். அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம்.எம். றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எப். எம்.ஹசீன், எஸ்.எம்.சௌஸான், எச். எம்.அப்ரத், ஜே.எம்.சஹ்ரான், என்.ரீ.எம். அஸ்ரிப் மற்றும் ரபான் கோலாட்ட பிரிவு மாணவர்களான ஜே.எம்.ஜரிஹ், எம்.எப். எம். அஸ்பல், எம்.எப்.எம்.பஹட் , ஏ.ஆர். எம்.சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம். ஏ.மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம். அபான், எஸ்.எம். ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம். பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப் மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம்மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான எம்.ஐ.எம். அமீர் (ஆசிரியர்), எம்.ஐ. அலாவுதீன், எம்.எச். பைசர், ஏ.எல்.எம். சாஜி (ஆசிரியர்),எஸ்.எச்.ஏ. கபூர் (வாத்தியம்) மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நௌசாத் ஆகியோர் உட்பட வெற்றிக்காகப் பங்குபற்றிய அனைவருக்கும் கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் பாராட்டுத் தெரிவித்தார். அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் வைபவ ரீதியாக இன்னும் திறக்கப்படாத நிலையில் இவ்வெற்றி கிடைத்தமை பாராட்டத்தக்கதாகும்.





இதேவேளை இவ்வெற்றிக்காக அயராது பாடுபட்ட நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸான் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், இம்மாணவர்கள் போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கிய கல்முனை சாஹிராக் கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபீர், சாய்ந்தமருது அல்ஜலால் பாடசாலை அதிபர் எஸ். சைபுதீன் ஆகியோருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

# விஞ்ஞான பொறியியல் மாணவரின் சாதனையை நேரில் சென்று பார்வை

கை மற்றும் கால்களின் சீரான செயற்பாடுகளை இழந்த விஞ்ஞான பொறியியல் பட்டதாரி சாணக்க மத்தும பண்டாரவின்,துணிச்சல் மிகு செயற்பாடுகளை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பாராட்டியுள்ளார். குறித்த பட்டதாரியின் பேராதனை இல்லத்துக்கு நேரடியாகச் சென்ற இராஜாங்க அமைச்சர், பட்டதாரி மாணவரால் செய்யப்பட்ட மண் பதனிடும் இயந்திரம், களையகற்றும் இயந்திரம் மற்றும் அறுவடை உபகரணங்கைளயும் பார்வையிட்டார்.

எதிர்காலத்தில், மேலும் இவ்வாறான தொழினுட்ப சாதனங்களை தயாரிக்குமாறும்,இதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களை முடியுமான வரை வழங்குவதாகவும் காதர்மஸ்தான் உறுதியளித்தார்.



ருகுனு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்தில் பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடந்த விளையாட்டுப் போட்டியின்போது ஏற்பட்ட விபத்தில்,

குறித்த இம்மாணவர் கை மற்றும் கால்களின் சீரான இயக்கங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகுக்கு அஹிம்சையை போதித்த இந்தியாவின் உறவு பெருமைக்குரியது

உலகிற்கே அஹிம்சையைப் போதித்த இந்தியா இன்று சுதந்திரத்தை கொண்டாடுவதில்,பெரும் மகிழ்ச்சியடை வதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:

உலகுக்கே அஹிம்சையை போதித்த இந்திய தேசம் சுதந்திரமடைந்து இன்றோடு (15) 77 ஆண்டுகளாகின்றன. சுதந்திரத்துக்குப் பின்னர் பல சவால்களை சந்தித்திருந்தாலும், இந்தியா இன்று பாரிய பொருளாதார சக்தியாக மாறியுள்ளமை மகிழ்ச்சி. 2030 ஆம் ஆண்டாகும்போது உலகில் மூன்றாவது பெரும் பொருளாதார சக்தியாக இந்தியா மாறக்கூடும். இதனால் இலங்கைக்கும் பல நன்மைகள் கிட்டும்.

தெற்காசியாவின் காவலனான இந்தியா, சகல சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு கைகொடுத்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, உதவிகளை வழங்கி, நாம்,மீண்டெழ சுவாசம் தந்ததே இந்தியாதான். இந்த மகத்தான நாளில் இதை,நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் மேம்பாட்டுக்காக மூவாயிரம் மில்லியனை இந்தியா வழங்கியுள்ளது.மலையக மக்களின் வாழ்வெழுச்சிக்கு இந்நிதி பயன்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை இந்திய சுதந்திர தினத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு என்பது பூகோள அரசியல் அல்ல. மாறாக அது உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுப்பாலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்கள் உட்பட அனைத்து இந்தியர்களுக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# நிட்டம்புவையில் கடத்தப்பட்ட வியாபாரி பலாங்கொடையில் மீட்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

கடனுக்கு வழங்கிய பணத்தை மீளத் திருப்பிச் செலுத்தாதவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில்,

நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.கடனுக்கு பணம் வழங்கிய நபரே இவரைக் கடத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடத்தப்பட்டவரின் சகோதரி இம்முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.இதையடுத்து உஷாரடைந்த பொலிஸார் கடத்திச் செல்லப்பட்ட நபரை,பலாங்கொடை பிரதேசத்தில் வைத்து மீட்டனர்.இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

2018 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர்,சக வியாபாரிக்கு 50 இலட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளார்.கடனை திருப்பி வழங்காது ஏமாற்றி வந்ததால்,ஆத்திரமடைந்த கடன் வழங்குநர் கடன் பெற்றவரின் சகோதரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு,சகோதரரைக் கடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார். இதனையடுத்தே,இதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் குறித்த சகோதரி முறைப்பாடு செய்தார்.

# தோட்ட தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் குறித்து கலந்துரையாடல்



பெருந்தோட்டத்துறையினரின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் அனுசரணை வழங்கிய இந்நிகழ்வு,

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.மலையக மக்களின் இருநூறு வருட வாழ்வில்,இதுவரை அடைய முடியாதுள்ள தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விடயங்கள் இதில்,கலந்துரையாடப்பட்டன. இவற்றைப் பெறுவதற்கான சாத்தியச் செயற்பாடுகள் இன்னும் இவற்றை அடைந்து கொள்வதில் ஏற்படுத்தப்படும் தடங்கல்கள் குறித்தும் கவனம் செலுத்தப் பட்டது. தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் தெளிவுப் படுத்தினார். பெருந்தோட்டதுறையில் பெண் தொழிலாளர்கள் அதிகாமாக ஈடுப்படுவதாகவும், இவர்களுக்கு தொழில் புரியும் தேயிலை மலைகளில் கழிவறை வசதி, உணவு உண்ணுவதற்கான வசதி வேலை நேரங்களில் நோய்கள் ஏற்பட்டால் அவர்கள் ஓய்வு எடுப்பதற்கு வசதிகள்

இல்லாதுள்ளதன் அவலத்தையும் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.தொழிலாளர்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளையும் இதுவரை தோட்ட நிர்வாகங்கள்,நிறைவேற்றாதுள் ளமை தொடர்பிலும் அமைச்சர் தனது அதிருப்தியை தெரிவித்துக் கொண்டார். (டி, சந்ரு)

# ஹம்பேகமுவ பிரதேசத்தில் கஞ்சா தோட்டங்கள் முற்றுகை

**ஊவா சுழற்சி நிருபர்**



தனமல்வில ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் காணியில், சட்ட விரோதமான முறையில்

பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டங்களை விஷேட அதிரடிப்படையினர் சுற்றி வளைத்தனர்.

நான்கு வெவ்வேறு காணிகளில் இவை, பயிரிடப்பட்டிருந்தன. உடவளவ விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (13) முற்றுகையிட்டனர். அங்கு 5 அடி உயரத்தில் வளர்ந்திருந்த சுமார் 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகளை படையினர் தீயிட்டு அழித்தனர். மேலும் இதுதொடர்பில், மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹம்பேகமுவ பகுதியில் பயிரிடப்பட்டிருந்த இந்த கஞ்சா தோட்டங்கள் குறித்து உடவளவ விஷேட அதிரடிப்படையினருக்கு பொது மக்கள் தகவல் வழங்கியிருந்தனர்.

# மாறாத சுற்றுலாக் கொள்கை விரைவில் முன்வைக்கப்படும்

அரசியல்வாதிகள் மாறினாலும், மாறாத சுற்றுலாக் கொள்கை விரைவில் முன்வைக்கப்படும் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

துறைசார் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட குறித்த கொள்கை வரைவை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும், அது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படும் என்பதை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நாட்டுக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறை, தற்போது முன்னேற்றமடைந்து வருவதாகவும், ஆனாலும் நாம் எதிர்பார்த்துள்ள இலக்கை இன்னும் அடையவில்லை என்றும் குறிப்பிட்ட அமைச்சர், படிப்படியாக நாம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.



சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நம் நாட்டில் உள்ள ஹோட்டல் அறைகள் போதுமானதாக இல்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக ஸ்திர நிலையை அடைந்து வருவதால் எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்தார். எனவே நாம் அவர்களுக்குப் பொருத்தமான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், தமது சொந்தக் கட்டிடங்களை சுற்றுலா விடுதிகளாக பயன்படுத்த விருப்பமுள்ள கட்டிட உரிமையாளர்கள் சுற்றுலா சபையில் பதிவு செய்து கொள்ளுமாறும், அதன் மூலம் அவர்கள் வருமானம் ஈட்டுவதுடன் நாட்டின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கும் உதவ முடியும் என்றும் தெரிவித்தார்.

புதிய சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும் வகையில் நாட்டின் அழகிய இடங்கள் குறித்த குறும்பட விழாவொன்றை நடத்தவுள்ளதாகவும், இந்த நாட்டில் உள்ள எவரும் இதில் பங்கேற்கலாம் என்றும் குறிப்பிட்ட அமைச்சர். சிறந்த குறும்படத்திற்கு பரிசில்களை வழங்கவும் அவர்களின் எதிர்காலப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான பயிற்சிகளை வழங்கவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், சுற்றுலாத் துறைக்கான புதிய கொள்கை ஒன்றை வகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது நடைமுறைக்கு வருமிடத்து, நாட்டில் அமைச்சர்கள் மாறினாலும், எப்போதும் மாறாத நிலையான சுற்றுலாக் கொள்கையுடைய சுற்றுலா வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பல்வேறு தரத்தினைக்கொண்ட ஹில்டன் ஹோட்டல் வலையமைப்பின் அதிகூடிய தரத்தைக் கொண்ட ஹில்டன் ஹோட்டல் ஒன்றை யால பிரதேசத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் திறக்கவுள்ளதாகவும், அதனுடன் இணைந்த வகையில் சுற்றுலாப் பிரச்சார வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சட்ட விரோத மோட்டார் சைக்கிள் பந்தயம் நடத்திய

## 9 பேர் சந்தேகத்தின் பேரில் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சட்ட விரோதமாக பணத்தை சம்பாதிப்பதற்காக மோட்டார் சைக்கிள் பந்தயம் நடத்திய 9 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை, பள்ளிமுல்ல பகுதியில் இந்த சட்ட விரோத மோட்டார் சைக்கிள் பந்தயம் இடம்பெற்றுள்ளதுடன், பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கிணங்க பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அவர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த மோட்டார் சைக்கிள் பந்தயம் கண்காட்சி போன்று நடத்தப்பட்டதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் பாணந்துறை மேலதிக மெஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 23ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## பக்தர்களின்...

போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன விகாராதிபதிக்கு உறுதியளித்துள்ளார்.

அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் அது தொடர்பில் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தபோதும் அந்த பஸ் சேவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை விகாராதிபதி அமைச்சருக்கு சுட்டிக் காட்டியதையடுத்து அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

அதற்கிணங்க பிரதி வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பக்தர்கள் அதிகமாக ஸ்ரீ மகா போதிக்கு வருகை தரும் தினங்களிலும் ஆகக் குறைந்தது இரண்டு பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன் போது உறுதியளித்துள்ளார்.

வட மத்திய மாகாண ஆளுநர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரக்கோன் , வட மத்திய மாகாண இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளுக்கும் உடனடியாகவே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ந்து இவ்வாறு ரயிலில் பயணம் செய்யும் பக்தர்கள் ஸ்ரீ மகா போதி வரை செல்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் சேவையில் இல்லாததால் அந்தப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டிகள் மூலமே அவர்கள் விகாரைக்கு செல்வர்.

சில வேலைகளில் அங்குள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் அராஜகமாக செயற்பட்டு பலாத்காரமாக பக்தர்களை ஏற்றிச் சென்று எழுநூறு ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை பணத்தை அபகரிக்கும் நிலை தொடர்ந்து வந்துள்ளது என்பதை விகாராதிபதி அமைச்சருக்கு சுட்டிக்காட்டியுள்ளார். பல தடவைகள் இந்த பாதையில் பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அந்த முச்சக்கர வண்டி சாரதிகள் அரசியல்வாதிகளுக்கும் இ.போ.ச அதிகாரிகளுக்கும் ரயில் நிலைய அதிபருக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளனர். அதனால் பயமடைந்த மேற்படி அதிகாரிகள் அந்த முயற்சிகளை கைவிட்டுள்ளனர் என்பதையும் விகாராதிபதி அமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள்ளார். அதற்கிணங்க பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அமைச்சர் குறகத்த பஸ் சேவையை நடத்துவதற்கு உறுதியளித்துள்ளார்.

## கடன் மறுசீரமைப்பை.,.. (03 ஆம் பக்கத் தொடர்)

இதனால், கடனை சீரமைத்தாலும், 2048ம் ஆண்டு வரை, இந்தக் கடன்களுக்கான கொடுப்பனவுகள் தொடருமென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த கிராமிய வீதி முதலீட்டு (I Road ) திட்டத்தின் கீழ், கெக்கிராவ முதல் தலாவ வரையிலான காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த 27 கிலோமீற்றர் வீதி காபட் இடப்பட்டு இருவழிப் பாதையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் இதற்காக செலவிடப்பட்ட தொகை 2422 மில்லியன் ரூபாவாகும்.

தலாவ சந்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுப் பலகையை அமைச்சர் பந்துல குணவர்த்தன திரைநீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர், 'வடமத்திய மாகாணத்திற்கு அதிக பெறுமதி சேர்ப்பதற்கான சந்தர்ப்பம் இன்று கிடைத்துள்ளது. இவ்வாறானதொரு பாரிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில், நாட்டில் எந்த ஒரு புதிய திட்டத்தையும் தொடங்கவோ அல்லது முதலீடு செய்யவோ அரசிடம் நிதி பலம் இல்லை. வரலாறு நெடுகிலும் எமது நாடு பல்வேறு தேவைகளுக்காக அதிகளவான கடனைப் பெற்றுள்ளது. குறிப்பாக முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற யுத்தத்திற்காக அதிகளவிலான கடன்களை வாங்க வேண்டியிருந்தது.

யுத்தம் முடிவடைந்த பின்னர், அதனால் ஏற்பட்ட அழிவுகளை மீட்பதற்கு அரசாங்கம் கடன் வாங்க வேண்டியிருந்தது. இந்த அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி உட்பட பெரும்பாலான அபிவிருத்திப் பணிகள் வெளிநாடுகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட அமைப்புகளின் கடனுதவியிலேயே மேற்கொள்ளப்பட்டன. மக்களிடம் வசூலிக்கும் வரிப்பணத்தில் சம்பளம், ஓய்வூதியம் வழங்குவது மற்றும் அன்றாடசெலவுகளை மாத்திரம் செய்ய முடியும்.

## இளைஞர் ஒருவர்....

பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர் பாணந்துறை நல்லுருவ மொரவின்ன பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஜயவீர லியனகே தேஷான் பெரேரா என பொலிஸார் தெரிவித்துள்ளனர். களுத்துறையில் இருந்து பாணந்துறை நோக்கி இடம்பெற்ற முச்சக்கரவண்டி போட்டியை மோட்டார் சைக்கிள்களில் காணொளி எடுத்துக் கொண்டு மற்றுமொரு இளைஞர் குழு வந்துள்ளது. இதன்போது நல்லுருவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் பலத்த காயமடைந்த இரு இளைஞர்களும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட இளைஞர்களில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி பிரசான் விஜேதுங்கவினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## பம்பலபிட்டியவில்...

பொலிஸார் தெரிவித்தனர். அதுதொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கையில், கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த பஸ் வண்டி தும்முல்லைப் பகுதியில் இருந்து வந்த லொறியுடன் மோது புரண்டுள்ள நிலையில் ஐவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பஸ்சில் 15 பேர் பயணித்துள்ளதுடன் காயமடைந்தவர்களில் ஐந்து

ஆண்களும் இரண்டு பெண்களும் உள்ளடங்குவதாக அவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் பஸ் சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் சாரதி வீதி சமிக்ஞையை கவனத்திற் கொள்ளாது பஸ் வண்டியை செலுத்தியதன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

## 263 விசேட... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் கடந்த ஒன்றரை வருடங்களில் செலவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களில் 667 டாக்டர்கள் வெளிநாடுகளுக்கு பயிற்சிக்காக சென்றுள்ளதுடன் மேலும் 617 பேர் பயிற்சிகளுக்காக வெளிநாடு செல்ல தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சீன கடல்சார்...

இலங்கைக்கு வரவுள்ள சீன கடல்சார் ஆராய்ச்சிக் கப்பல் நவம்பர் மாதம் வரை இலங்கையில் நங்கூரமிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இக்கப்பலின் விஜயத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கு இலங்கை அரசாங்கம் இதுவரை சாதகமான பதிலை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன பாதுகாப்பு கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்தமையினால் கடல்சார் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இந்திய அரசாங்கம் பல தடவைகள் இலங்கை அரசாங்கத்திடம் தமது கரிசனையை வெளிப்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் கடல்சார் ஆராய்ச்சி கப்பல் ஒன்று இலங்கை வரவுள்ளமை தொடர்பில் மிகவும் கவலையடைவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய சீன கடல் ஆராய்ச்சிக் கப்பலான ஷியான் 6 இலங்கையில் உள்ள கடல் பாதுகாப்பு நிறுவனமான நாரா நிறுவனத்துடன் இணைந்து அறிவியல் ஆய்வுக்கு தயாராகி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

தென் இந்தியப் பெருங்கடல் உள்ளிட்ட பகுதிகளில் விரிவான ஆய்வு நடத்தப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## டாக்டர்களுக்கான... (03 ஆம் பக்கத் தொடர்)

தன்மையே இவ்வாறு டாக்டர்கள் மேலும் மேலும் வெளிநாடுகளுக்குச் செல்வதால் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுமானால் வெளிநாடுகளிலிருந்தும் டாக்டர்களை வரவழைக்க நேரும். இந்த நெருக்கடி காரணமாக 3 டாக்டர்கள் சேவையில் ஈடுபடவேண்டிய இடத்தில் ஒரு டாக்டரே பணிபுரிய நேரிடும்.

அதேவேளை ஹம்பாந்தோட்டை உட்பட சில வைத்தியசாலைகளில் கடமையிலிருந்த ஒரே விசேட மருத்துவர்களும் வெளிநாடுகளுக்குப் போயுள்ள நிலையில் அந்த வைத்தியசாலைகளில் தற்போது விசேட மருத்துவர் இல்லாத நிலையே காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ....

எனக் கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று காலை குறித்த ஆர்ப்பாட்டம் இராணுவ முகாமுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை எனவும், குறித்த பகுதியில் இடம்பெறும் மண் கடத்தல், கஞ்சா கடத்தல் உள்ளிட்ட சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவி தேவை என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4 வது சிங்க றெஜிமென்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரி இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

தற்போது இருக்கின்ற இராணுவ முகாம் அகற்றப்பட்டாலும் இதே பகுதியில் இருக்கும் அரச காணி ஒன்றில் இராணுவ முகாமை அமைத்து இந்த பகுதியில் இடம் பெறும் சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வங்கி வட்டி...

இடம்பெற்ற அதிகார சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் போது, வங்கி வட்டி விகிதங்கள் 34 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால் இன்று அவை 16 முதல் 17 சதவீதமாக உள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளதாக ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மடு மாதா...

விசேட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உள்ளடங்களாக அமைச்சர்கள் பலரும் இன்றைய தினம் மடு திருத்தலத்திற்கு வருகை தர உள்ளமையினால் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 25,000...

மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக 650 மில்லியன் அமெரிக்கன் டொலர் நேரடி முதலீடு செய்யப்படவுள்ளது. அதற்கிணங்க அதில் 400 மில்லியன் அமெரிக்கன் டொலர் பெறுமதியான திட்டத்தை தேசிய விநியோகத்திற்காக பயன்படுத்தவுள்ளதுடன் ஏனைய நிதியை திட்டத்தின் சர்வதேச கொள்வனவு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளதுடன் அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்திருந்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, மின்சக்தி எரிசக்தி அமைச்சு ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இத்தத் திட்டத்தின் மூலம் வருடாந்தம் 648 கிஹா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதுடன் அதன்மூலம் நாட்டுக்கு எரிபொருள் இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்படுவதுடன் வருடாந்தம் 116.64 மில்லியன் டொலரை அதன் மூலம் மீதப்படுத்தவும் முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு நிவாரண அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் பல நிதி நெருக்கடி காரணமாக இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்தகைய வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு இந்த திட்டத்தின் மூலம் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் அரச காணிகளை கிராமங்களாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளில் இதுவரை நிறைவு செய்யப்படாத வீடுகளை நிறைவு செய்து அவற்றுக்கு சூரிய சக்தி மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## ரூ.1,80,000 மில்....

50 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## கண்டி மாத்தளை...

கட்டுகஸ்தோட்டைக்கும் இடையில் அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக புகையிரத சேவை நிறுத்தப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டிக்கும் மாத்தளைக்கும் இடையில் நாளொன்றுக்கு சுமார் 12 புகையிரதங்கள் இடம்பெறுவதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அலுவலகங்கள் தெரிவிக்கின்றன.

## இலங்கையின்...

மேற்கொண்டுள்ள இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, 'இலங்கையின் அப்போஸ்தலர்' புனித ஜோசப் வாஸின் உருவப்படத்தை மும்பை பேராயர் மாளிகையில் பேராயர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

பம்பாய், மேதகு ஓஸ்வால்ட் கார்டினல் கிரேசியஸ் நேற்று (14)

உயர் ஸ்தானிகர் மற்றும் பம்பாய் பேராயர் ஆகியோர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருங்கிய மத உறவுகள் மற்றும் குறிப்பாக இரு நாடுகளிலும் உள்ள கத்தோலிக்க சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளின் மூலம் மக்களுடன் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மும்பையில் உள்ள இலங்கையின் கான்சல் ஜெனரல் டாக்டர் வல்சன் வேத்தோடியும் கலந்து கொண்டார். 1651 ஆம் ஆண்டு இந்தியாவின் கோவாவில் பிறந்த புனித ஜோசப் வாஸ், நற்செய்தியின் சிறந்த இந்திய மிஷனரி, இலங்கையில் உள்ள கத்தோலிக்க சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியான சேவையை வழங்கினார். அவர் 1687 இல் ஒரு பயணத் தொழிலாளியாக மாறுவேடமிட்டு அப்போதைய டச்சு கோட்டையான யாழ்ப்பாணத்தை (இலங்கையின் வடக்கே) அடைந்தார். அப்போதிருந்து, புனித ஜோசப் வாஸ் கத்தோலிக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் தனது ஒப்பற்ற சேவையைத் தொடர்ந்தார். அவர் 16 ஜனவரி 1711 இல் இறக்கும் வரை கண்டி, இலங்கை. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி, இலங்கையின் கொழும்பு காலி முகத்திடலில் போப் பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டம் பெற்றார்.

## IMF உடனான....

இந்த நடவடிக்கைகள் நிதி அமைச்சின் தலைமையில் நடைபெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ள நிபந்தனைகளில் ஏறக்குறைய 80 விகிதமானவை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு போலி...

குறித்த போலி முகவரின் வீடு முற்றுகையிடப்பட்டு அவரை கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அமிர்தகழி பிரதேசத்தைச் சேர்ந்த போலி முகவரிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக பலர் பணத்தை வழங்கிய நிலையில், அவர் வெளிநாட்டுக்கு அனுப்பாது ஏமாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், போலி முகவருக்கு எதிராக இருவர் முறைப்பாடு செய்திருந்தனர். இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் நடத்திய தொடர் விசாரணையில் குறித்த நபர் தலா 4 இலட்சம் 50 ஆயிரம் ரூபா வீதம் 22 பேரிடம் பணமோசடியில் ஈடுபட்டதை கண்டறிந்தனர். இதனை தொடர்ந்து, வெளிநாட்டு வேலைவாப்பு பணியக அதிகாரிகள் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரின் உதவியுடன் குறித்த போலி முகவரின் வீட்டை முற்றுகையிட்டு கைது செய்து மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணையின் பின்னர் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐக்கிய...

சம்மேளனத்தை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடவே செயற்குழு கூடுவதாகவும் செயலாளர் குறிப்பிட்டார்.

குறிப்பாக அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் பிரேரணை, அது தொடர்பில் அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை விரைவாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும், கட்சியின் தொகுதி மாநாடுகளை நடத்தி கட்சியின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் இதன்போதும் கவனம் செலுத்தப்பட இருக்கிறது.

விசேடமாக ஐக்கிய தேசிய கட்சியின் 77ஆவது சம்மேளனத்தை எதிர்வரும் செப்டம்பர் 10 ஆம் திகதி நடத்த தீர்மானித்திருக்கிறோம். இதனை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட இருக்கிறது. இறுதியாக இடம்பெற்ற கட்சியின் செயற்குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது மீளாய்வு செய்யப்பட இருக்கிறது.

செயற்குழு கூட்டத்தை கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடத்தவே நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கடந்த 2 ஆம் திகதி கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## விடைத்தாள்...

அனுப்பவேண்டுமென அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கு விண்ணப்பிக்கும் திகதி கடந்த 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக 'எமது சேவையின்' கீழ் ஒன்லைன் மூலம் 'பாடசாலை பரீட்சை' என்பதை தெரிவு செய்து, விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ

கையடக்கத்தொலைபேசியூடாக Mobile application ஆன DoE மூலம் பதிவிறக்கம் செய்து ஒன்லைன் மூலம் அதனை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பாடசாலை அதிபர்கள் மூலமாக செப்டெம்பர் 01ஆம் திகதிக்கு முன்னர் ஒன்லைன் மூலம் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்காக 1911, 0112 785231, 0112 785216, 0112 784037 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மாதாவின் விண்ணேற்பு இன்று

# மணிமுடி சூடியவராய் தோமாவுக்கு காட்சியளித்த அன்னை

இறைமகன் இயேசுவால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அன்னை மரியாவை மகனுக்குரிய அன்போடும் அக்கறையோடும் திருத்தூதர் யோவான் பாதுகாத்து வந்தார். மற்றத் திருத்தூதர்களும் மரியாவைத் தங்கள் தாயாக ஏற்று அவருக்கு மதிப்பளித்து வந்தனர். அன்னையின் இவ்வுலக வாழ்வின் முடிவில் அவரை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்தில் ஏற்றுக் கொண்டார் கடவுள்.



தொடக்கத்தில் அன்னை மரியாவின் அரவணைப்பின் கீழ் யூத மக்களிடையே தங்கியிருந்து எருசலேமில் நற்செய்தி பணியாற்றிய திருத்தூதர்கள், சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளிநாடுகளில் இயேசுவை அறிவிக்கச் சென்றனர். யோவான் அன்னை மரியாவோடு எபேசு நகருக்கு சென்று, கடவுள் மனிதரான நற்செய்தியை மக்களிடம் பறைசாற்றினார். யோவானோடு சேர்ந்து அன்னை மரியாவும் எபேசு நகர் மக்களுக்கு கடவுளின் மேன்மையை எடுத்துரைத்து வந்தார்.

தொடக்க கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாட்களில் இறைவேண்டலுக்காக ஒன்று கூடியபோது, அன்னை மரியாவும் அவர்களோடு சேர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். இறைமகன் இயேசுவின் தயாகுமாறு, ஆண்டவராகிய கடவுள் தமக்கு செய்த அரும்பெரும் செயல்களை மரியா அவர்களுக்கு எடுத்துரைத்தார். கடவுளாய் இருந்தும் மனிதரான இயேசு, இறைத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற அனுபவித்த துன்பங்களைப் பற்றியும் அவர்களிடம் அவர் பகிர்ந்து கொண்டார்.

இவ்வாறு இயேசுவின் விண்ணேற்றத்துக்குப் பிறகு, அன்னை நற்செய்தி பணி செய்தார்.

விண்ணில் அன்னை

அன்னை மரியாவின் இறுதிக்காலம் நெருங்கியபோது, யோவான் அவரை அழைத்துக் கொண்டு எருசலேம் நகருக்கு சென்றார். பல்வேறு நாடுகளுக்கும் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கச் சென்றிருந்த திருத்தூதர்கள் கடவுளின் தூண்டுதலால் அன்னையைக் காண புறப்பட்டனர். தோமாவைத் தவிர மற்றத் திருத்தூதர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் எருசலேம் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு ஆசி வழங்கியதும் அன்னை மரியா மரணமடைந்தார்.

தெய்வீக ஒளி வீசிய அவரது உடலை விலையுயர்ந்த துணிகளால் பொதிந்த திருத்தூதர்கள், யூத முறைப்படி கல்லறையில் அடக்கம் செய்தனர்.

திருத்தூதர் தோமா மூன்று நாட்கள் தாமதமாக எருசலேம் வந்து சேர்ந்தார். அன்னை மரியாவின் ஆசியைத் தேடி வந்த தோமா, அவரது மரணச் செய்தியைக் கேட்டு மனமுடைந்து போனார். இறையன்னையின் முகத்தைக் காணும் வாய்ப்புக்கூட கிடைக்காதது குறித்து பெரிதும் வேதனை அடைந்தார். மற்றத் திருத்தூதர்களை வற்புறுத்தி அன்னையின் கல்லறைக்கு அழைத்துச் சென்றார். கல்லறையைத் திறந்து பார்த்தபோது, அன்னையின் உடலை அங்கு காணவில்லை. மாறாக, விண்ணக ஒளியும் மணம் வீசும் மலர்களும் அங்கு காணப்பட்டன. ஆண்டவர் இயேசு, தம் அன்னை மரியாவை உடலோடு விண்ணகத்தில் ஏற்றுக்கொண்டார் என அவர்கள் முழு மனதோடு நம்பினர்.

வீட்டிற்குத் திரும்பிய திருத்தூதர்கள், அன்னையின் விண்ணேற்பை எண்ணி கடவுளைத் துதித்துப் பாடினர். ஆனால், அன்னையின் முகத்தை மீண்டும் ஒருமுறை காண வேண்டுமென்ற ஆவல் திருத்தூதர் தோமாவை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது. அதற்காக, அவர் விண்ணகத்தை நோக்கி இடைவிடாமல் மன்றாடி வந்தார். அதன் பயனாக, மரியன்னை தலையில் மணிமுடி சூடியவராய் தோமாவுக்கு காட்சி அளித்தார். தாம் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்தில் இருப்பதை உறுதி செய்த அன்னை மரியா, தோமாவுக்கு தம் இடைக் கச்சையைப் பரிசாக வழங்கிவிட்டு மறைந்தார்.

**எல்.எஸ்.**




# கடவுளின் அன்பை அனுபவித்தல்

## கர்தினால் பியத்ரோ பரோலின்



ஒவ்வொரு பணிக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பவர் கடவுள் என்றும், அவர் தேர்ந்தெடுத்து, அர்ப்பணித்து அனுப்பிய வருக்கு அவருடைய அருளால் வலிமையையும், துணிவையும் ஞானத்தையும் தருகிறார் என்றும் கர்தினால் பியத்ரோ பரோலின். தொரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி அங்கோலாவில் நடைபெற்ற ஆயர் *Germano Penemote* அவர்களின் ஆயர் திருநிலைப்பாட்டுத் திருநிகழ்வில் பங்கேற்று மறையுரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடவுளின் முயற்சிக்கு மனிதனின் சுதந்திரமான பதில் ஒத்திருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அழைப்பவர், அழைக்கப்பட்டவர் இருவருக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவு ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது எனவும், கடவுளைப் பற்றிய அறிவைப் பரப்புதல், சந்திக்கும் மக்களுக்கு அவருடைய சிந்தனை, வார்த்தை மற்றும் அன்பைக் கொண்டு செல்லுதல், கடவுளின் அளவற்ற இரக்கத்தை அறிவித்தல், அனுபவித்தல் போன்றவைகளே அந்நோக்கம் என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார்

.

ஒவ்வொரு பணியும் மனிதர்களுக்கான கடவுளின் மீட்புத் திட்டத்தில் உள்ளது என்று வலியுறுத்தியுள்ள கர்தினால் பரோலின் அவர்கள் தூய ஆவியின் துணை, ஆறுதல் மற்றும் நம்பிக்கையை அனுப்பப்பட்டவரின் பணியில் அளித்து கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான சந்திப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்துவின் தூதராகவும் திருப்பீடத்தூதுவராகவும் பணியாற்ற உள்ள பேராயர் *Germano Penemote* அவர்கள், மக்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கான அடையாளமாகவும், தலத்திருஅவைகளுக்கிடையில் ஒற்றுமையின் அடையாளமாகவும் அனுப்பப்பட்டு ஓர் உயரிய பணியினை ஆற்ற இருக்கின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடவுள் – மனிதன், படைப்பாளர் – படைப்பு, உண்மை நீதி – மகிழ்ச்சி, மனித மனம் – மனிதகுல பிரச்சனை ஆகியவற்றிற்கு இடையே ஆழமான மற்றும் உறுதியான நல்லிணக்கத்தின் அடையாளமாகச் செயல்படவும் பேராயர் ஜெர்மானோவைக் கேட்டுக் கொண்டுள்ளார் கர்தினால் பரோலின்.

மனிதன் தன் பணியின் வெற்றி, துயரங்களில் கிறிஸ்துவின் வெளிப்பாடு, இறைவனின் முழு மீட்பு மற்றும் முழுமையைக் காண்கிறான் என்று எடுத்துரைத்துள்ள கர்தினால் அவர்கள், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பவராக இருப்பது என்பது, மறைமுகமாகவும், விவேகமாகவும் செயல்பட்டு கடவுள்அன்பை அறிவிப்பதாகும் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

**மெரினா ராஜ்**

## பொல்ஹேன்கொட திரு இருதயநாதர் ஆலய திருவிழா







கொழும்பு பொல்ஹேன்கொட புனித இருதயநாதர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை பிரகீத் டிஷான் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றம், நவநாட்கள் திருவிழா திருப்பலி மற்றும் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றன. வழமையான வீதியில் திருச்சுரூப பவனி இடம்பெற்றதுடன் பவனி ஆலயத்தை வந்தடைந்து இறுதி ஆசீர்வாதம் இடம் பெறுவதையும் அருட்தந்தையுடன் திருப்பலிப் பூசை உதவிப் பணியாளர்களையும் மற்றும் விசுவாசிகளையும் படங்களில் காணலாம்.

# கடவுள் நம்பிக்கை

ஒரு பெண்மணி மருத்துவரிடம் சென்று "டாக்டர்! காலையில் எழுந்தவுடன் அரைமணி நேரம் என் தலை சுத்துகிறது" என்றார். அதற்கு மருத்துவர், "அப்படியானால் அரைமணி நேரம் கழித்து எழுந்திரு" என்றார். மருத்துவர்கள் மருந்து கொடுக்கிறார்கள்.

அது நமது நோய்களைத் தற்காலிகமாக மட்டுமே குணப்படுத்தும். மீண்டும் நோய் நம்மைத் தாக்கும். நோய்க்கு, குறிப்பாக மனக் கவலைக்கு நிரந்தர மருந்து உண்டா ? கடவுளிடம் சரணடைவதே மனக்கவலைக்கு ஒரே மருந்து என்கிறார் வள்ளுவர்.

தனக்குவமை இல்லாதான் தான் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (குறள் 7)



இந்த ஞாயிறு தற்செய்தியில் இயேசுவின் சீடர்கள் ஓர் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இயேசு அப்பம் பலுகச் செய்த புதுமையைக் கண்ட சீடர்களும் மக்களும் அவரை அரசராக முடிசூட்ட முயன்றனர்.

ஆனால் இயேசுவோ அதை ஏற்க மறுத்து, சீடர்களிடம் அக்கரைக்குப் படகில் செல்லும்படி கட்டளையிட்டார். அவர் இக்கரையிலேயே தங்கிவிட்டார்.

இயேசுவால் தனிமைப்படுத்தப்பட்ட சீடர்கள் கடலில் செல்லும் போது கடல் கொந்தளிக்க, புயல் காற்று வீசுகிறது. பயத்து செத்துக் கொண்டிருந்த வேளையில் கடலில் இயேசு நடந்து வந்தார்.

அவர்கள் அவரைப் பேய் என்று கருதி பயத்தால் அலறினர். ஆனால் இயேசுவோ அவர்களிடம், "துணிவோடு இருங்கள். நான்தான். அஞ்சாதீர்கள்" என்கிறார்.

நம்முடைய வாழ்க்கைப் படகைப் பல்வேறு துன்பங்கள் அலைக்கழிக்கின்றன. அவ்வேளையில் கடவுள் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று நினைக்கிறோம். ஆனால் இருள் நம்மைக் கவ்விக் கொள்ளும் வேளையிலும் கடவுள் தம்மோடு இருக்கிறார்.

"அஞ்சாதீர்கள்" என்று தைரியம் கொடுக்கிறார், துன்ப வேளையில் நமக்குக் கைகொடுக்கும் திருப்பா, "சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சேன்" (திபா 23:4),

இயேசு சீடர்களிடம், "நான்தான்" என்று கூறியதில் ஆழமான ஓர் இறையியல் உண்மை பொதிந்துள்ளது. பழைய ஏற்பாட்டிலே மோசே கடவுளின் பெயர் என்னவென்று கேட்ட போது கடவுள் கூறிய பதில்! "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (விப 3:14). கிறிஸ்து "நான்தான்" என்று கூறியதன் மூலம் தாம் கடவுள் என்பதை உணர்த்துகிறார்.

கடவுள் என்றும் இருப்பது போல் இயேசுவும் என்றும் இருக்கிறார். இன்றைய நற்செய்தியில், புயல் நின்றவுடன் படகில் இருந்தவர்கள் இயேசுவைப் பணிந்து, "உண்மையாகவே நீர் இறைமகன்" (மத் 14:33) என்று அறிக்கையிடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து என்றும் நம்மோடு இருக்கும் இம்மானுவேல் (மத் 1:22 23), உலகம் முடியும் வரை எந்நாளும் நம்மோடு இருக்கிறார் (மத் 28:20). அவரே நமது ஒளி, நமது மீட்பு. யாருக்கு நாம் அஞ்ச வேண்டும்? அவர் நமது அடைக்கலம், எனவே யாருக்கு நாம் நடுங்க வேண்டும் (திபா 27:1).

பேதுருவும், இயேசுவைப்போல் கடலில் நடக்க முற்பட்டபோது அவா காற்றின் வேகத்தைக் கண்டு அஞ்சி தண்ணீரில் மூழ்கப் போனபோது, "ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்" என்று அலறினார். இயேசு அவரது கையைப் பிடித்து, தம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" என்று கூறி அவரைக் கடிந்து கொண்டார்.

ஓர் ஊரின் அருகாமையில் ஆறு ஓடியது. ஆற்றின் அக்கரையில் ஒரு சந்நியாசி இருந்தார். ஊரிலிருந்து ஒரு கைம்பெண் ஆற்றில் படகேறி அக்கரையில் இருந்த அவருக்கு பசும்பால் கொண்டுவந்து கொடுத்து வந்தார்.

அவர் ஒரு சில நாள்களில் படகோட்டித் தாமதமாக வந்தபோது தாமதமாகச் சந்நியாசிக்கு பால் கொண்டு போனார். இதை அறிந்த சந்நியாசி அவரிடம், "இனிமேல் படகில் வராதே, பகவான் பெயரைச் சொல்லி ஆற்றில் நடந்து வா" என்றார். அக் கைம்பெண்ணும் ஆற்றில் நடந்தார்.

இதைக் கண்ட சந்நியாசியும் அப்பெண் பின்னால் ஆற்றில் நடந்த போது ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டார். சாதாரண எளிய கைம் பெண்ணுக்கு இருந்த கடவுள் நம்பிக்கை அச்சந்நியாசிக்கு இல்லாமற் போனது.

அதிகமாக படித்தவர்களிடம் இருக்கும் கடவுள் தம்பிக்கையைவிடச் சாதாரண பாமர மக்களிடமே அதிகமாகக் கடவுள் நம்பிக்கை காணப்படுகிறது என்பது உண்மையே. கடவுளும் விண்ணரசின் மறைபொருளை ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்துகிறார் என்பதும் உண்மையே (லூக் 10:21)

துன்பம் நம்மை வாட்டி வதைக்கும்போது கடவுள் தம்மிடம் கூறுவது: "அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக் கொண்டேன். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன். நீ எனக்கு உரியவன், நீர்நிலைகள் வழியாக நீ செல்லும் போது நான் உன்னோடு இருப்பேன்; ஆறுகளைக் கடந்து போகும்போது அவை உன்னை மூழ்கடிக்க மாட்டா: தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்படமாட்டாய். நெருப்பு உன்மேல் பற்றி எரியாது. ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவர் நானே" (எசா 43:13).



கிறிஸ்து நமக்குக் கூறுவது: "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். தான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன் (யோவா 16:33

**அருட்பணி
எஸ்.எக்ஸ்ஜெரோம்**

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிலற்றோர் வீதம் அதிகரிப்பு

### மட்டு. மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா

(பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்)



தொழிலற்றோர் வீதம் அதிகரித்து வருவதாக, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார். மாவட்டத்தின் மாபெரும் தொழில் கல்விச் சந்தை சனிக்கிழமை (12) மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், சுமார் 30 இற்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறுவனங்கள், அரச தனியார்துறை தொழிற் கல்வி நிறுவனங்கள் கலந்து கொண்டன.

சுமார் 1000 ற்கு மேற்பட்ட உடனடித் தொழில் வாய்ப்புக்களோடு இந் நிறுவனங்கள் இத் தொழிற் சந்தையில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழில் கல்விச் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு 4 வீதமாக இருந்த தொழிலற்றோர் விகிதம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 7.2 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் மொத்த தொழிலற்றோர் வீதம் 22 ஆக உள்ளது.

உயர்தரக் கல்வியை முடித்தவர்கள், பல்கலைக்கழகம் செல்லாத ஒரு தரப்பினர், சாதாரண தரத்தில் விடுபடுகின்ற தரப்பினர், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் இவ்வாறு பலதரப்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள்.

அரசாங்க உத்தியோகங்களை விட தனியார் தொழில் துறைகளில் அதிக வேலைவாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

தனியார் தொழில் துறையின் மூலம்தான் உண்மையான பொருளாதார அபிவிருத்தி அடைந்து கொள்ள முடியும். எனவே, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எல்லோரும் சிந்திக்க வேண்டும் என தெரிவித்தார். நிகழ்வில் மாவட்ட உதவிச் செயலாளர் ஏ. நவேஸ்வரன், நிகழ்வை இணைப்பாக்கம் செய்து அனுசரணை வழங்கிய அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் வி. சுதர்ஷன், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன், மாவட்ட சமூக சேவை அலுவலர் சந்திரகலா கோணேஸ்வரன், மாவட்ட மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட தொழில் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழில் தருநர்கள், உள்நாட்டு வெளிநாட்டு தொழில் தேடுவோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஆன்மீக பணியில் வைரவிழா காணும் மௌலவி எம்.எம். அப்துல் லத்தீப்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்



அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால், ஆன்மீகப் பணியில் வைரவிழா காணும் அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமா சபையின் முன்னாள் தலைவரும், தற்போதைய போஷகருமான அல் ஹாஜ் மௌலவி எம்.எம்.அப்துல் லத்தீப் (பஹ்ஜி) இன் பணியைப் பாராட்டி, அக்கரைப்பற்று சமூகம் சார்பில் "மறை சுமந்து தீன்காத்தவர்' என்ற சிறப்பு பட்டம் வழங்கி, பொன்னாடைபோர்த்தி, கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையையடுத்து பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் அஷ் ஷேய்க் ஏ.எம். ரஹ்மதுல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

விழா நாயகன் மௌலவி அப்துல் லத்தீப் பொன்னாடைபோர்த்தி, நினைவுச்சின்னம் மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையடுத்து, நம்பிக்கையாளர் சபை செயலாளர் அஷ் ஷேய்க் ஏ.எம். ரஹ்மதுல்லாஹ் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், ஏ.எல்.எம் சபூர், ஏ.எல்.தவம், ஏ எல். நுபைல் மற்றும் மௌலவி ஏ. கே.ஸியாத் ஆகியோர் பாராட்டுப் பதிரத்தை வழங்கி வைத்தனர்.

## பாதையை புனரமைக்குமாறு கோரிக்கை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கஷ்டப் பிரதேசமான இஸ்மாயில்புரம் சுனாமி மீள் குடியேற்றத்திட்டத்திற்கு செல்லும் பிரதான பாதை நீண்ட காலமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

கல்முனை அம்பாறை பிரதான வீதியிலிருந்து செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதியே இவ்வாறு உடைந்தும் சிதைந்தும் போக்குவரத்திற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றது.

இவ் வீதியிலேயே வளத்தாப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயமும் காணப்படுகின்றது. பலதடவை இவ்வீதி அளவீடு செய்யப்பட்ட போதிலும் இதுவரை திருத்தம் செய்யப்படாது காணப்படுவதாக பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கினறனர்.

## மத்தியஸ்த சபைகளின் பணிகளை விஸ்தரிக்க புதிய உறுப்பினர்கள்

(ஒலுவில் விசேட நிருபர்)

மத்தியஸ்த சபைகளின் பணிகளை விஸ்தரிப்பதற்காக மத்திஸ்த சபை ஆணைக்குழுவினால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பாடசாலை மட்டங்களிலும் மத்தியஸ்த சபைகள் ஏற்படுத்தப்பட்டுவருவதாக, அட்டாளைச்சேனை பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் ஐ.எல்.எம். ஹாசிம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் பாரப்படுத்தப்பட்ட பாலமுனை பிரதேச வழக்குகளுக்கான மத்தியஸ்த செயல்பாடு ஞாயிற்றுக்கிழமை (13) பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்தியஸ்த சபையின் தவிசாளர் ஐ.எல்.ஹாசிம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மத்தியஸ்த சபைகள் மக்களின் பிரச்சினைகளை சரியான முறையில் கண்டறிந்து எந்த பாகுபாடு இல்லாமல் தீர்வினை வழங்க வேண்டும். சரியான தீர்வு வழங்கப்படாவிட்டால் நாங்கள் நீதியை நிலை நாட்டாதவர்களாக மாறிவிடுவோம்.

மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் சமூகத்தால் எப்போதும் கௌரவிக்கப்படுகின்றவர்கள். அவ்வாறு கௌரவிக்கப்படுகின்றவர்கள் நன்மதிப்புடன் திகழ வேண்டும்.

மக்கள் பல பிரச்சினைகளுடன் வருவார்கள் அவர்களை நாம் சிறந்த பக்குவத்துடன் அனுகி அவைகளுக்கான தீர்வினை வழங்க வேண்டும். சமூகத்தை நல்வழிப்படுத்துபவர்களாக மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் எப்போதும் திகழ வேண்டும் என்றார்.

## ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை பிரதிநிதிகளுடன் ஹரீஸ் எம்.பி சந்திப்பு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கல்முனை கிளை உறுப்பினர்களுக்கும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களுடனான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (13) கல்முனை பள்ளி வீதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை மக்கள் எதிர்நோக்கும் சமூக, சமய, கலாசார மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றி இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கல்முனையின் வளர்ச்சிக்காக அனைத்து தரப்பினர்களும் ஒன்றினையும் அவசியத்தை வலியுறுத்தியும், போதைவஸ்து பாவனையினால் சமூக கலாசார ஒழுக்க விழுமியங்களின் சீரமைப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இப் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடி தீர்வை பெற்றுத்தருவதாகவும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளையின் நலத் திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவதாகவும், தன்னால் இயன்ற உதவிகளை செய்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் உலமாக்களுக்கு உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின் போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளையினால் "வேற்றுமையில் ஒற்றுமை" எனும் தொனிப் பொருளில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

புதிய காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாசலில் (11) வெள்ளிக்கிழமை குர்ஆன் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பள்ளிவாசல் தலைவர் கே.எல் எம்.பரீட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார்.

இவ் வைபவத்தில் உலமாக்கள், பிரமுகர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது குர்ஆன் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்களுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## ஆலிம்நகர் விவசாய காணியில் உப உணவு பயிர்ச் செய்கை



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட விவசாயக் காணிகளில் உப உணவு பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வேலைத் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரிய நிலப்பரப்பில் உழுந்து, பாசிப்பயறு, கௌபி போன்ற பயிர்கள் நடும் வேலைத்திட்டம் அதிதிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அக்கரைப்பற்று ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையப்பொறுப்பு விவசாயப் போதனாசிரியர் ஏ.ஜி. பிர்னாஸ் ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விவசாயக் காணிகளில் மூன்றாவது போக பயிர்ச் செய்கையை மேற்கொள்வதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து, விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தற்காலத்தில் மேட்டு நில உற்பத்திக் காய்கறிகள், அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதனால், இலாபம் மேலும் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அம்பாறை மாவட்ட விவசாயிகளில் அதிகமானவர்கள் தற்பொழுது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.



கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகங்கள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் மூத்த கலைஞர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, திங்கட்கிழமை (14) ஏ.எம்.ஜமால்டீன் என்பவருக்கு வழங்கப்பட்டது. அட்டாளச்சேனை உதவி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைப்பு



(அக்கரைப்பற்று மத்திய, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளரின் வேண்டுகோளின் பேரில் ஹெலங்கா நிறுவனத்தினால் சி. எஸ். ஆர். திட்டத்தின் கீழ், சுமார் 52 மாணவர்களுக்கான பாடசாலை பாதணிகள் இலவசமாக வழங்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று மாநகர ஹல்லாஜ் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ. ரி. எம்.றாபி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஹெலங்கா நிறுவன பிரதிநிதி ஸ்டீபன் அன்டன், அக்கரைப்பற்று பதுர் பாடசாலை அதிபர் நாஸர், சமூக செயற்பாட்டாளர்களான ஆசிரியர் ரியாத் முகைதீன், முசாதிக், மாநகர சபை உத்தியோகத்தர் சலீத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹாரிஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கி வைத்தனர். இதில் மாநகர சபை அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

## கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை





கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் திங்கட்கிழமை (14) நடைபெற்றன. பாடசாலை அதிபர் எம்.எஸ். அகமட் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்வியியலாளர் ஏ. எஸ். மகரூப் விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

(படம்: கிண்ணியா மத்திய நிருபர்)



யாழ்.புங்குடுதீவு கண்ணகிபுரம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை சிவாகம வித்யாஜோதி சிவ.ஸ்ரீ ச.மதுசூதன சிவாச்சாரியார் பூர்வாங்க கிரியைகளை நிகழ்த்துவதையும் கோபால் சிவாச்சாரியார், தர்சக சர்மா,கொழும்பு சிவநேச சிவாச்சாரியார்,சிவஸ்ரீ கலாநிதி இராமசந்திர குருக்கள் பாபு சர்மா,லகுதர சர்மா,கோண்டாவில் ஹரிசுதன் குருக்கள் ஆகியோர் கிரியைகளில் பங்குபற்றியிருப்பதையும் அம்பாள் வீதி உலா வலம் வருவதையும் படத்தில் காணலாம்.

# மடு ஆலயப்பகுதியில் விஷ ஜந்துக்கள் நடமாட்டம் அதிகரிப்பு

### மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

*(தலைமன்னார் விசேட நிருபர்)*



மன்னார் மருதமடு ஆலயப்பகுதியில் விஷ ஜந்துகளால் ஒரு சிலர் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் தங்கியிருப்போர் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆவணி மாதம் பெருவிழாவுக்கு (15) ஏழு இலட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை சுமார் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டோர் வருகை தந்து ஆலய சூழலில் கூடாரங்கள் அமைத்து தங்கியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த இரு தினங்கள் மடுப்பகுதியில் இடையிடையே மழைபெய்துவருவதால் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பக்தர்கள் விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைக்கு வருவதாகவும் மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.வினோதன் தெரிவித்தார்.

எனவே மருதமடு ஆலய சூழலில் தங்கியுள்ள பக்தர்கள் இதுதொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.வினோதன் தெரிவித்தார். ஏதாவது இனந்தெரியாத அல்லது அடையாளம் காணப்பட்ட விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மடு தேவாலயத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்துகளால் நாளொன்றுக்கு 120 பேர் அனுமதி

*(யாழ்.விசேட நிருபர்)*



யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 120 பேர் விபத்துக்களில் சிக்கி சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படுவதாக, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு சராசரியாக 120 பேர் விபத்து பிரிவில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படுகின்றனர். நேரடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களும், வேறு வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களில் சுமார் 10 பேர் என்பு முறிவுகளுடன் அனுமதிக்கப்படுகின்றனர். சிறிய முறிவுக்கு உடனடியாக சிகிச்சை வழங்க முடிகிறது.

பெரும்பான்மையான என்பு முறிவுக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அவற்றின் போது சிலருக்கு தகடு வைக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இவ்வாறான பெரியளவிலான சத்திர சிகிச்சைக்காக சுமார் 4 மாத கால பகுதிக்கு மேல் காத்திருக்க வேண்டும். இவற்றுக்கு சுமார் 10 இலட்ச ரூபாவுக்கு மேல் செலவாகின்றது. அதேவேளை சில மருந்துகளுக்கு தட்டுப்பாடும் நிலவுகின்றது.

எனவே விபத்துக்களில் சிக்காது அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக இளையோர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் அதிகமாக சிக்குகின்றனர். அவதானமாக மோட்டார் சைக்கிள் செலுத்த வேண்டும்.

அதேவேளை மன அழுத்தங்கள் , வாகனத்தில் பயணிக்கும் போது சிந்தனைகளை தவறவிடுதல் , வேறு சிந்தனைகளுடன் பயணித்தல் போன்றவற்றாலும் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

எனவே அனைவரும் விபத்துக்களிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# கல்வியங்காட்டில் ஆணின் சடலம் மீட்பு; நான்கு பெண்கள் உட்பட அறுவர் கைது!

*(யாழ். விசேட நிருபர்)*

### மாணவி மீதான பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டையடுத்து பரபரப்பு சம்பவம்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் 54 வயதுடைய ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் இரு பெண்களும் நான்கு ஆண்களும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது 54) என்பவரே இவ்வாறு கடந்த சனிக்கிழமை அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில்

உயிரிழந்த நபர் 9 வயது பாடசாலை மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளதாகவும் அதனால் மாணவியின் தாய் உள்ளிட்ட உறவினர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபர் முச்சக்கர வண்டி சாரதி. இவருடனே மாணவி பாடசாலைக்கு சென்று வந்துள்ளார். இதன்போதே சாரதி மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

இதனையடுத்து மாணவி இதுகுறித்து தாயாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

தாயார், சித்தங்கேணி பகுதியில் வசிக்கும் தனது சகோதரனுக்கு தெரியப்படுத்தியுள்ளார். அவர் , கோப்பாய் வந்து முச்சக்கர வண்டி சாரதியை சித்தங்கேணிக்கு அழைத்து சென்று கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி தாக்கியுள்ளார்.

பின்னர் அவரை கோப்பாய் வீட்டுக்கு கொண்டு சென்று இறக்கியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது. சித்தங்கேணி பகுதிக்கு அழைத்து சென்று தாக்கிய குற்றச்சாட்டில், சிறுமியின் தாய், பெரியதாய் உள்ளிட்ட இரு பெண்களும் நான்கு ஆண்களும் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை பாதிக்கப்பட்ட 09 வயது சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. உடற்கூற்று பரிசோதனை அறிக்கையின் பின்னரே மரணத்துக்கான காரணத்தை தெரிந்து கொள்ள முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் பலி



*(யாழ்.விசேட நிருபர்)*

வடக்கில் குளவிக் கொட்டு சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண்ணொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

காரைநகர் களபூமியை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் (வயது 63) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

களபூமி பகுதியிலுள்ள ஆலயமொன்றில் சிரமதான பணியில் ஈடுபட்டிருந்த வேளை குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார். அதனையடுத்து, வலந்தலை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ். வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வறிய குடும்பங்களுக்கு உதவி



*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் செஞ்சோலை மாதிரி கிராமம், தேறாங்கண்டல் மக்களுக்கு 536,000 ரூபா செலவில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி மலையாளபுரத்திலுள்ள செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கின்ற குறைந்த வருமானம் பெறும் தெரிவு செய்யப்பட்ட 24 குடும்பங்களுக்கு ரூபா 96,000 பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய், தேறாங்கண்டல் கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தால் நலிவடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 110 குடும்பங்களுக்கு ரூபா 440,000 பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவரது தொண்டர்கள் சமூக செயற்பாட்டாளரான இ. தயாபரன், தேறாங்கண்டல் கிராம சேவையாளர் ஆகியோருடன் நேரடியாக சென்று வழங்கிவைத்தார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை 11/08/2023 சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சிறப்பு நிகழ்வாக இன்னிசை விருந்து நடைபெற்றது. இ.நிறோஜனின் வயலின், நக்கீரனின் மிருதங்க இசை, மற்றும் கேதாரநாத் ஆகிய அணிசெய் கலைஞர்களின் இசையில் ஜே.மதுசிகனின் இன்னிசைப் பாடல்கள் நடைபெற்றன. இதில் சிறப்பாக பாடல் பாடிய. J.மதுசிகனுக்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# கத்தோலிக்க தொலைக்காட்சி தொகுப்பாளர் திடீர் மரணம்

*(தலைமன்னார் விசேட நிருபர்)*



மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நிகழ்வுகளை நேரலையாக ஒளிப்பரப்பும் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்த மன்னார் ஊடகவியலாளர் ஒருவர் திடீர் மரணமடைந்துள்ளார். இந்நிலையில் விஷ ஜந்து ஒன்று தாக்கியமையால் விஷம் உடல் முழுவதும் பரவி மரணம் சம்பவித்துள்ளதாக மரண விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் ஆலயப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மன்னார் புதுக்கமத்தைச் சேர்ந்த 28 வயதான ஜெகநாதன் டிரோன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் இப்பிரதேசத்தில் நடைபெறும் கத்தோலிக்க நிகழ்வுகளை நேரலையாகத் தொகுத்து அனுப்பும் நபராக செயற்பட்டுவந்துள்ளார். மன்னார் மருதமடு அன்னையின் வருடாந்த ஆவணி பெருவிழா கடந்த 06.08.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இப்பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை பெருவிழாத் திருப்பலியுடன் நிறைவு பெறுகின்றது. இந்நிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் திடீரென உயிரிழந்துள்ளார் ஞாயிற்றுக்கிழமை (13) இரவு எட்டாம் நாள் நவநாள் ஒளிப்பரப்பு நிகழ்வுகளை முடித்துவிட்டு மடுவில் தனது நண்பர்களுடன் இரவு 11 மணியளவில் உரையாடிக் கொண்டிருந்தபோதே இவர் திடீரென உயிரிழந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# மட்டுவிலில் ஆணின் சடலம் மீட்பு

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் கிழக்கு பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 42 வயதான தபால் நிலைய ஊழியர் எனத் தெரியவந்துள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



யாழ்.பல்கலைக்கழகத்தில் செஞ்சோலை படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்றுக்கூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவர்களின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தினர். அதன் தொடர்ச்சியாக செஞ்சோலை படுகொலையின் நினைவுரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வஸ்டர் ஜெல்சினால் நிகழ்த்தப்பட்டது. செஞ்சோலை தாக்குதலில் சுமார் 61 பேர் கடந்த 2006.08.14 ஆம் திகதி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பருத்தித்துறை நிருபர்)

# இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.1 சதவீதமாக வளர்ச்சி அடையும்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.9 சதவீதத்தில் இருந்து 6.1 சதவீதமாக வளர்ச்சி அடையும் என சர்வதேச நாணய நிதியம் ஆரூடம் கூறியுள்ளது. இதை வரவேற்றுள்ள இந்தியாவின் 15ஆவது நிதி ஆணைக்குழுவின் தலைவர் என்.கே.சிங், இந்தியாவின் இந்தப் பொருளாதார வளர்ச்சி வருடா வருடம் அதிகரித்துச் செல்லும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

என்.கே.சிங் மற்றும் லோரன்ஸ் சம்மர்ஸ் ஆகியோரினால் தயாரிக்கப்பட்ட நிதி அறிக்கையின் முதல் பாகம் வெளியிடப்பட்ட நிலையில், இந்திய பொருளாதார வளர்ச்சி நிலை குறித்து இந்திய – ஜப்பான் பொருளாதார கூட்டத்தில் உரையாற்றிய இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்தியாவின் தொடர்ச்சியான முன்நோக்கிய பொருளாதார வளர்ச்சி 2047ஆம் ஆண்டில் இந்தியா முழுமையாக வளர்ச்சி அடைந்த நாடாக மாறும் வரை தொடரும் என்பதை சுட்டிக் காட்டினார்.

அடிப்படைக் கட்டமைப்பு, முதலீடு, கண்டுபிடிப்பு மற்றும் உள்ளடக்கும் தன்மை என்பன இப் பொருளாதார வளர்ச்சியின் போது தொடர்ச்சியாக கவனத்தில் கொள்ளப்படும் என்றார்.

இந்த நிதி அறிக்கையின் இரண்டாம் பாகம் எதிர்வரும் அக்டோபரில் வெளிவரவுள்ளது. மொரோக்கோவில் நடைபெறவுள்ள ஜி 20 வருடாந்த கூட்டத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ள நிதியமைச்சர்கள் மாநாட்டில் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தும் பல்தரப்பு அபிவிருத்தி வங்கிகளை உருவாக்கும் செயல்திட்டம் பற்றி விவாதிக்கப்படும் என்றும், உலகளாவிய பொருளாதார சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்றும் நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவித்துள்ளார்.




மலையகம் 200 என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக விழிப்புணர்வு நடைபவனி ஒன்றினை கேகாலை மாவட்ட இளைஞர் குழுவில் உள்ள களனி தோட்ட, கிரிபோருவ இளைஞர் குழு, அப்பிரதேச அதிபர்கள் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கற்றோர்கள் இணைந்து நடாத்தினார்கள். இந் நிகழ்வானது கிரிபோருவ தோட்ட இறப்பர் தொழிற்சாலை முன்றலில் இருந்து ஆரம்பமானது.



விவேகா பயிற்சி நிலையம் அழைப்பின் பேரில் இந்தியாவில் இருந்து வருகை தந்த Resileo Labs LLP நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் பி. நாகராஜன், இணை துணை தலைவர் எஸ். சிவசுப்பிரமணியன், நிர்வாக இயக்குனர் பிரதாப் சேது இணைந்து நடத்தும் நவீன தொழில்நுட்ப நேரலை இணைய வகுப்புகளுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று வெள்ளவத்தை, சைவ மங்கையர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. விவேகா பயிற்சி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் கே. ட. குருசுவாமியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சைவ மங்கையர் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேஷன், கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த குமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

(படம் : அஷ்ரப் ஏ சமத்


## இலங்கை முதலீட்டு சபை

# பெறுகை அறிவித்தல்

மேற்படி பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2023.08.12 சனிக்கிழமை மற்றும் 2023.08.15 செவ்வாய் தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.

CONSTRUCTION OF PERIMETER FENCE (200 ACRES LAND) - STAGE 1 AT TEXTILE MANUFACTURING ZONE, PUNNAIKUDA, ERAVURPATTU, BATTICALOA

CONTRACT NO: BOI/TS/TMZ/2021/18/74.08.001/1A

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகையை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2023.08.12 சனி மற்றும் 2023.08.15 செவ்வாய் தினங்களில் (Daily News) பத்திரிகையின் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**


## தாய்வானிய நிறுவனமான ஃபொக்ஸ்கொன்

# தமிழகத்தில் 1,600 கோடி ரூபாவுக்கு முதலீடு

எப்பள் கைபேசி உற்பத்தி நிறுவனத்துக்கான உதிரிப் பாகங்களைத் தயாரிப்பதற்கான தொழிலகம் ஒன்றை இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட மூன்று மாதங்களில் மேலும் 400 மில்லியன் டொலர்களை தாய்வானிய நிறுவனமான ஃபொக்ஸ்கொன் ஒதுக்கியுள்ளது.

ஹைதராபாத் நகருக்கு வெளியே கொங்கானா கலான் பகுதியில் இத் தொழிலகத்தை அமைக்கும் திட்டம் தெலுங்கான அரசுக்கும் ஃபொக்ஸ்கொன் நிறுவனத்துக்கும் இடையே கையெழுத்தானது. ஆரம்பத்தில் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கக் கூடியதாக 150 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அது 550 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது தெலுங்கானா அரசின் செயல்திறனைக் காட்டுவதாகவும் அம் மாநில தகவல் தொழில்நுட்ப பிரதம செயலாளர் ஜாயேஷ் ரஞ்சன் தன் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இத் தொழிலகம் 120 ஏக்கர் பரப்பில் ஒரு வருட காலத்துக்குள் அமைக்கப்பட்டு உற்பத்தியை ஆரம்பித்துவிடும்.

இதேசமயம் கடந்த வாரம் சென்னை சென்றிருந்த ஃபொக்ஸ்கொன் தலைவர் யங்லீ, முதல்வர் எம்.கே.ஸ்டாலினை சந்தித்து பேசினார். அதன் பின்னர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,600 கோடியில் கைபேசி உபகரண தயாரிப்பு நிறுவனமொன்றை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இத் தொழிலகம் செயல்படத்தொடங்கியதும் ஆறாயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கும் எனத் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார். ஒப்பந்தம் கைச்சாத்தானபோது கைத்தொழில் அமைச்சர் யு.ஆர்.பீ.ராஜா, தலைமைச் செயலாளர் ஷிவதாஸ் மீனா, மேலதிக தலைமை செயலாளர் (கைத்தொழில்) எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**இல. 03 களுத்துறை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**காலிந்ர ஜயவீர பெர்னாந்து,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 03 களுத்துறை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, களுத்துறை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0342222266

**இல. 04 கண்டி** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**எச்.டீ.என்.சம்பத் பெர்னாந்து,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 04 கண்டி
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, கண்டி தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0812233187

**இல. 05 மாத்தளை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**எச்.ஏ.ஈ. புஷ்பகுமார** , உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 05 மாத்தளை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, மாத்தளை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0662222422

**இல. 06 - நுவரெலியா** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**கே.ஏ.எல்.எஸ். களுகம்பிட்டிய** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 06 நுவரெலியா
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, நுவரெலியா தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0522222325

**இல. 07- காலி** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**டப்ளியூ.எச்.ஆர்.விஜயகுமார**, உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 07 காலி
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, காலி தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0912234028

**இல. 08- மாத்தறை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**ரீ.டப்ளியூ. போஷிதா கௌமதி** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 08 மாத்தறை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, மாத்தறை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0412222305

**இல. 09- அம்பாந்தோட்டை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**ரவீந்திர சுபாஷன வெதகே**, உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 09 அம்பாந்தோட்டை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, அம்பாந்தோட்டை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0472256248

**இல. 10 - யாழ்ப்பாணம்** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**ஆர்.சீ.அமல்ராஜ்,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 10 யாழ்ப்பாணம்
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0212222655

**இல. 11 - வன்னி** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**ஜே.ஜெனிற்றன்,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 11 வன்னி
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, வன்னி தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0242222311

**இல. 12 - மட்டக்களப்பு** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**எம்.பி.எம்.சுபியான்,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 12 மட்டக்களப்பு
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, மட்டக்களப்பு தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0652224312

**இல. 13 - திகாமடுல்ல** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**கசுன் ஸ்ரீநாத் அத்தனாயக்க** , உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 13 திகாமடுல்ல
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, திகாமடுல்ல தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0632224342

**இல. 14 - திருகோணமலை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**பியுமி ஆட்டிகல,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 14 திருகோணமலை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, திருகோணமலை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0262222304

**இல. 15 - குருநாகல்** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**ஆர்.எம்.எச்.பி.ரத்னாயக்க,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 15 குருநாகல்
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, குருநாகல் தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0372222369

**இல. 16 - புத்தளம்** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**எஸ்.எல்.ஆர்.ஜயநாயக்க,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 16 புத்தளம்
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, புத்தளம் தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0322265246

**இல. 17 - அநுராதபுரம்** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**கே.முகுந்தன்,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 17 அநுராதபுரம்
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, அநுராதபுரம் தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0252222551

**இல. 18 - பொலன்னறுவை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**பியுமி ஆட்டிகல,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 18 பொலன்னறுவை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, பொலன்னறுவை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0272222012

**இல. 19 - பதுளை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**கே.காந்தீபன்,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 19 பதுளை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, பதுளை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0552222424

**இல. 20 - மொனராகலை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**என்.ரேகன்**, உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 20 மொனராகலை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, மொனராகலை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0552276315

**இல. 21 - இரத்தினபுரி** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**சுரங்க அம்பகஹதென்ன,** உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 21 இரத்தினபுரி
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, இரத்தினபுரி தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0452222023

**இல. 22 - கேகாலை** தேர்தல் மாவட்டத்திற்குரிய “அ” பட்டியல் மற்றும் “ஆ” பட்டியல் தயாரித்து நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது செல்லுபடியாகும் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மற்றும் அந்த பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேருநர் இடாப்பு, “அ”, “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல் பற்றிய அறிவித்தல்கள் இன்றைய தினம் (2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி) தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.
**சஜித் பீ.கஸ்தூரிசிங்க**, உதவிப் பதிவு அலுவலர், தேர்தல் மாவட்ட இலக்கம் 22 கேகாலை
2023 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி, கேகாலை தேர்தல்கள் அலுவலகத்தில். தொலைபேசி : 0352222561

# Dialog Axiata தொடர்ந்து 5வது வருடமாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தக நாமமாக Brand Finance இனால் தரநிலைப்படுத்தப்பட்டுள்ளது

உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance தமது 20வது வருடாந்த ஆய்வில் 'இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமம்' எனும் மேன்மைமிகு பட்டத்தை நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இற்கு ரூ. 52 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வழங்கி கௌரவித்துள்ளது. அதற்கமைய இலங்கையின் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக வளர்ந்திருக்கும் டயலொக், AAA+ மதிப்பீட்டை பெற்றுள்ளது. அத்துடன் டயலொக் ஆனது தொடர்ந்து 16வது முறையாக 'மிகவும் மதிப்புமிக்க தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் சுவீகரித்துள்ளது.

இவை மட்டுமின்றி 17 மில்லியன் இலங்கையர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை டயலொக் வென்றிருப்பதையும் இலங்கை மக்களின் வாழ்வு மற்றும் நிறுவனங்களை நிலைபேறான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் ஊடாக வலுவூட்டி வலுப்படுத்தும் நிறுவனத்தின் தீர்க்கமான அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாக 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' எனும் பட்டத்தையும் தொடர்ந்து 7வது ஆண்டாக சூடிக்கொண்டது. 'எதிர்காலம் இன்றே' எனும் தன் வர்த்தகநாம உறுதிமொழிக்கு உண்மையாக இருக்கும் வகையில் டயலொக் தொடர்ந்தும் அனைவரையும் உள்வாங்கும் வகையிலான, மலிவான, எல்லோரும் அணுகக்கூடிய அதிசிறந்தமான தொழில்நுட்பம் மற்றும் இணைப்பையும் தொடர்ந்து வழங்குவதோடு நாட்டை ஒரு டிஜிட்டல் தேசமாக மாற்றியமைப்பதற்கான தன் முயற்சியிலும் மும்முரம் காட்டிவருகின்றது.

'உயர்ந்த சேவை' எனும் நிறுவனத்தின் கொள்கைக்கு தீர்க்கமான அர்ப்பணிப்பை வழங்கும் பொருட்டு நிறுவனமானது தன்னிகரற்ற வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்கி வருகிறது. எடுத்துக்காட்டாக, இதன் டிஜிட்டல் பராமரிப்பு சூழலமைப்பை குறிப்பிடலாம். இதில் "DIA" எனும் மெய்நிகர் உதவியாளர் (Virtual Assistance), MyDialog App மற்றும் Google Assistant உடன் குரல் கட்டளை வசதியை ஒருங்கிணைத்தல் ஆகியவையும் அடங்கும். நாடளாவிய ரீதியில் சமூகத்தில் நல்மாற்றத்தை விளைவிக்கும் பொருட்டு நிறுவனமானது தனது கூட்டாளர்களுடன் இணைந்து நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வினை காணும் வகையில் 'தேசிய எரிபொருள் அட்டை



படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Brand Finance தலைவர் ருச்சி குணவர்தன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணயக்கார

(Fuel Pass)' யை அறிமுகப்படுத்தியது. மேலும், தனது பங்காளர்களுடன் கைகோர்த்து நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான கூட்டின் மூலம் அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கியது. அத்துடன், 'Karuna.lk' எனும் இலங்கையின் முதல் உசாறுவகரனெலைப தளத்தின் அறிமுகமானது தொழில்நுட்பம் மூலம் அர்த்தமுள்ள மாற்றத்தை நிகழ்த்த டயலொக் காட்டும் முனைப்பை எடுத்துக்காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ அவர்கள் "இந்த அங்கீகாரத்தை வெற்றிகொள்ள எமக்கு உதவிய 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் அசைக்கமுடியாத நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் நாம் நன்றியுடையவர்கள் ஆகின்றோம். இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக நாம் தொடர்ந்தும் தொழில்நுட்பத்தின் மாறிவரும் சக்தியை கையாண்டு இலங்கையர்களின் வாழ்க்கை தரம் மற்றும் நிறுவனங்களை வளமூட்டி வலுவூட்டுவோம்" என்றார்.

இலங்கை Brand Finance இன் தலைவர் ருச்சி குணவர்தன உரையாற்றுகையில், "எமது பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்ட டயலொக்கிற்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இது ஏனைய வர்த்தகநாமங்களால் பின்தொடரப்பட வேண்டிய ஒரு முன்னுதாரணம் ஆகும். தொலைத்தொடர்புத் துறையில் பல்வேறு குறிகாட்டிகளினூடாக நாம் மேற்கொண்ட மதிப்பீடுகள் அத்தனையூடாகவும் டயலொக் தனது வர்த்தகநாமத்தின் மதிப்பை அதிகரித்து வர்த்தகநாமத்தின் பலத்தை கட்டியெழுப்பியுள்ளமை புலப்பட்டுள்ளது" என்றார்.

Brand Finance உலகின் முன்னணி சுயாதீனமான வர்த்தகநாம மதிப்பீடல் ஆலோசனை நிறுவனமாகும். இது இலங்கை உட்பட 25 நாடுகளில் தன் அலுவலகங்களை கொண்டியங்கி வருகிறது. Brand Finance ஆனது வர்த்தகநாமங்களின் நிதி மதிப்பை அளவிடுதல் மூலம் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிக்கிடையிலான இடைவெளிக்கு ஒரு பாலமாய் அமைகிறது. Brand Finance ஆனது தனது லீக் அட்டவணையிலுள்ள வர்த்தக நாமங்களின் மதிப்புகளை Royalty Relief approach எனும் ஐஎஸ்ஓ 10668 சான்றுக்கு இணங்கிய ஒரு வர்த்தகநாம மதிப்பீட்டு முறை மூலம் கணக்கிடுகிறது. இது ஒரு வர்த்தகநாமம் அடையக்கூடிய எதிர்கால வருவாய்களை மதிப்பிடுதலை உள்ளடக்கும்.

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## அறிவித்தல்

### கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை – 2024

கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணை கேள்விப் பத்திரங்கள் (2023.09.26)

2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2023.07.21 திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**கட்டான பிரதேச செயலகம்,**
**தெமங்ஹந்திய.**
2023.08.07

**பிரியங்கா கொடிதுவக்கு,**
**பிரதேச செயலாளர்.**
**கட்டான.**

---


## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.05.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 22.08.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா, யாழ் நகரம், முள்ளங்காவில்.

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதி இராஜகிரிய
22.08.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செயமாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600


---

## அறிவித்தல்

### அங்கத்தவர் பெயர் பட்டியலைக் காட்சிப்படுத்தல்

வரையறுக்கப்பட்ட மாதம்பே பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தின் சகல பிரதேசங்களிலும் 2023.06.30ம் திகதிக்கு அங்கத்தவர் பெயர் பட்டியல் மற்றும் வாக்குரிமை உடைய அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் உங்களது அறிவூட்டலுக்காக பிரதேசத்தில் வைக்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் பெயர் பட்டியலில் உங்களது அங்கத்துவம் பற்றி கீழ்க்காணும் பிழைகள் இருப்பின் 2023.08.25ம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறிவித்து தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

01. பெயரை, பெயர் பட்டியலில் சேர்க்கப்படாமை
02. பிழையாக பெயர்கள் சேர்க்கப்படல்

ஒரு பகுதியின் பெறுமதி ரூ. 100/- ஆவதுடன் அங்கத்துவம் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் ஒரு வருடம் முடிவடையும் வரை வாக்களிக்கும் அல்லது பதவிகளை வகிக்கும் உரிமை இல்லையென்பதுடன் முழுமையான அங்கத்துவம் கிடைத்த பின்னர் மாத்திரமே மேற்படி உரிமைகள் கிடைக்கும்.

01. நவ நகர பிரதேசம்
02. கல்கமுவ பிரதேசம்
03. மெல்லவாகர பிரதேசம்
04. ரத்மல்லாகர பிரதேசம்
05. மத்துகம பிரதேசம்
06. புஞ்சி விலத்தாவ பிரதேசம்
07. கொக்காவில எரிபொருள் நிலையம்
08. கரவிட்டாகர பிரதேசம்
09. மனற்குளம் பிரதேசம்
10. களுகல்ல பிரதேசம்
11. மெதகம பிரதேசம்
12. காக்காப்பள்ளி பிரதேசம்
13. செம்புகட்டிய பிரதேசம்
14. சவராண பிரதேசம்
15. சம்பல பிரதேசம்
16. பழைய நகர பிரதேசம்
17. உடலவெல பிரதேசம்
18. முகுனுவட்டவன பிரதேசம்
19. நான்கடவர பிரதேசம்
20. அத்துவன பிரதேசம்
21. புலியன்கார பிரதேசம்
22. சிப்பிகலான பிரதேசம்
23. இனிகொடவெல பிரதேசம்
24. ஹரிந்தாகம பிரதேசம்
25. மரதன்குளம் பிரதேசம்

**பணிப்பாளர் சபை செயலாளர்,**
**வ/ப மாதம்பே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

---

## பெறுகை அறிவித்தல்

### கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் (வடமேல்)

### மகுல்வெவ பிடவைக் கைத்தொழில் நிலையம் புதுப்பித்தல்

1.1) வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரித்தான மகுல்வெவ பிடவைக் கைத்தொழில் நிலையத்தை புதுப்பிப்பதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அதன் முழுச் செலவு மதிப்பீடு ரூபா 7.7 மில்லியன் ஆவதுடன், நிர்மாண காலம் 02 மாதமாகும். நிதித் தன்மை மாகாண நிலையான அபிவிருத்தி மானியமாகும்.

1.2) நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) C6. C7, C8, இன் கீழ் பதிவு செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1.3) பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 3500.00ஐ வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்காளரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

1.4) பெறுகை ஆவணங்களை 2023.08.15 முதல் 2023.08.27 வரை அலுவலக நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் தேவைப்படும் கேள்விதாரருக்கு கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு 037-2222719, 037-2222296 என்ற தொ. பே. இலக்கங்களை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1.5) இருபிரதிகளுடனான பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை ஆவணங்களை 2023.08.28 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அன்றே மு.ப. 10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ்வேளையில் சமுகமளிக்கலாம். இப்பெறுகை பற்றிய பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர்/ தலைவர் (பெறுகைக்குழு),**
**கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் (வடமேல்),**
**E கட்டிடம், மாகாண சபைக் கட்டிடத் தொகுதி.**

---


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your Ad For Better Offers


---

## கேள்விக்கான அழைப்பு

(இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)

### விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சீடா - CIDA பதிவு உடைய கேள்விதாரர்களிடம் இருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.08.15 முதல் 2023.09.04 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் இத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்வதுடன் 2023.09.05 மு.ப. 10.30 இற்கு முன் இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

மேற்படி செயற்பாடு சம்பந்தமாக மேலதிகமாக தேவைப்படும் தகவல்கள் இருப்பின் விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து அல்லது கீழ்க்காணும் தொ. பே. இலக்கத்தின் மூலம் விசாரித்தறியலாம். கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினம், நேரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இலக்கம் | நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தல் | CIDA பதிவு வகுதி | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக செலுத்துவதாயின் (ரூ. சதம்) | வங்கிப் பிணை முறி ஒன்றை சமர்ப்பிப்பதாயின் (ரூ.சதம்) |
| செதி/ப/06/2/2023/90 | அநுராதபுரம் உட மலுவ ஹெலபொஜுன் ஹல நிர்மாணம் (மூன்றாம் கட்டம்) ரூ. 20,137,680.84 | C5 C6 C7 | 5,000.00 | 201.250.00 | 402,500.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையம்**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**
**தொ.பே. இல. 081-2389127**
**பெக்ஸ்: 081-2389127**

---

### பாதுகாப்பு அமைச்சு

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

**முன்மொழியப்பட்ட அரங்கத்தின் கட்டுமானத்திற்காக துருப்பிடிக்காத இரும்பு கைப்பிடிச்சட்டங்களை வழங்குதல், செயற்படுத்தல் மற்றும் நிறுவுதல்**

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 09/2023

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்கத்தின் கட்டுமானப்பணிக்காக துருப்பிடிக்காத இரும்பு கைப்பிடிச்சட்டங்களை வழங்குதல், செயற்படுத்தல் மற்றும் நிறுவுவதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.08.16** ஆம் திகதியிலிருந்து **2023.09.18** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் மீளச்செலுத்தப்படாத **ரூ.4,500/-** கட்டணத்தை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் **(கணக்கு இலக்கத்திற்கு 9405831)** வைப்புச் செய்து **பணிப்பாளர் வலங்கல் மற்றும் சேவை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இரத்மலானை** எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2023.08.16** முதல் **2023.09.18** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)**

4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

5. **2023.09.19 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாடடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி - **0710219449, ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம் விலைமனுக்கோரலிருந்து)

**தவிசாளர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான, இலங்கை.**

## லங்கா பிரீமியர் லீக்கில் இரு வெளிநாட்டு வீரர்கள்



லங்கா பிரீமியர் லீக் தொடரில் மாற்று வீரர்களாக இரு வெளிநாட்டு வீரர்களை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கோல் டைடன்ஸ் அணியைச் சேர்ந்த நியூசிலாந்தின் டிம் செய்பார்ட் மற்றும் சாட் போவஸ் இருவரும் சர்வதேச போட்டியில் பங்கேற்பதற்காக வெளியேறும் நிலையில் அவர்களுக்கு பதில் ஆப்கானிஸ்தானின் நஜிபுல்லா சத்ரான் மற்றும் பங்களாதேஷின் லிட்டோன் தாஸ் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கோல் டைட்டன்ஸ் அணி இன்று (15) நொக் அவுட் போட்டியில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸை எதிர்கொள்ளவுள்ளது. இதில் வெற்றிபெறும் அணி இறுதி நான்கு அணிகளுக்குள் இடம்பிடிக்கும்.

இதில் வெற்றிபெறும் அணி தம்புள்ள அவுரா, பிலவ் கண்டி மற்றும் ஜப்னா கிங்ஸ் அணிகளுடனேயே கடைசி நான்கு அணிகளிலும் இடம்பிடிக்கும்.

## வெளிநாடு செல்ல சச்சித்ரவுக்கு தடை



இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சித்ர சேனநாயக்க வெளிநாடு செல்வதை தடுப்பதற்கு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (14) உத்தரவிட்டுள்ளது.

இந்த பயணத் தடை மூன்று மாதங்களுக்கு அமுலில் இருக்கும்.

2020 ஆம் ஆண்டு லங்கா பிரீமியர் லீக் போட்டியின் போது ஆட்ட நிர்ணய விவகாரம் தொடர்பிலேயே சச்சித்ர சேனநாயக்க மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் திலீபா பீரிஸினால் விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சச்சித்ர சேனநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்வதற்கு விளையாட்டுத் துறை அமைச்சின் சிறப்பு விசாரணை பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தி இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சச்சித்ர சேனநாயக்க 2020இல் நடைபெற்ற முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது அதில் பங்கேற்கும் இரு வீரர்களை டுபாயில் இருந்து தொலைபேசியில் அழைத்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுத்த முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டது.

## கார்மல் பற்றிமா வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவானது.

ஏறாவூர் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் அரையிறுதியில் அம்பலாந்துறை மகா வித்தியாலயத்தையும், இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியையும் கார்மல் பற்றிமா கல்லூரி அணி தோற்கடித்தது.

## சம்பியனானது கே.சீ.சீ.

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



பலளுவெவ ரொலெக்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கட்டுக்கெலியாவ கே.சீ.சீ. விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பலளுவெவ ரொலெக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இம்மாதம் 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தத் தொடரில் 16 அணிகள் பங்கேற்றிருந்தன. இதன் இறுதிப் போட்டியில் விஜிதபுர டப்ளியூ.சீ.சீ. அணியை கே.சீ.சீ. அணி வீழ்த்தியது.

இறுதிப் போட்டியில் ஒரு ஓவரில் ஓட்டம் எதுவும் கொடுக்காது மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றிய கே.சீ.சீ. அணியின் ரவ்ஸான் சிறப்பாட்டக்காரராக தெரிவுசெய்ப்பட்டார்.

## இலவன் ஸ்டார் வெற்றி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட ஜொலிபோய்ஸ் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலவன் ஸ்டார் அணி வெற்றியீட்டியது.

கழகத்தின் தலைவர் புனித ராஜ் தலைமையில் தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற இறுதிப் போட்டியில் றஹீமிய்யா அணியை எதிர்கொண்ட இலவன் ஸ்டார் நிர்ணயிக்கப்பட்ட 63 ஓட்ட வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது.

### உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப்

# இலங்கை மெய்வல்லுனர் அணி இன்று புடபாஸ்ட் நகர் பயணம்




19ஆவது உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி இன்று (15) ஹங்கேரி, தலைநகர் புடபாஸ்டை நோக்கி பயணிக்கவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 19 தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் 207 நாடுகளைச் சேர்ந்த 2,087 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்தப் போட்டியில் இலங்கை சார்பில் ஆறு ஆண் வீரர்களுக்கும் மற்றும் ஒரு பெண் வீராங்கனையும் பங்கேற்பதாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச பதக்கம் வென்றிருக்கும் காலிங்க குமாரகே இலங்கை மெய்வல்லுனர் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும், தெற்காசியாவின் அதிவேக ஓட்ட வீரரான யுபுன் அபேகோன் இந்தப் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றபோதும் பல்வேறு காரணங்களுக்காக போட்டியில் பங்கேற்பதை தவிர்த்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியிலும் அபேகோன் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அந்தப் போட்டியில் பங்கேற்பதையும் தவிர்த்தார். எனினும் சீனாவின் ஹங்சுவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியை இலக்கு வைத்து அவர் தயாராகி வருகிறார் என்று கூறப்படுகிறது.

தவிர இலங்கையின் மத்திய தூர ஓட்ட வீராங்கனையான கயந்திகா அபோரத்ன 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் புடபாஸ்ட் செல்ல தகுதி பெற்றபோதும், கடைசி நேரத்தில் போட்டியில் பங்கேற்பதில் இருந்து விலகிக் கொண்டார். செப்டெம்பரில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியை இலக்கு வைத்து பயிற்சிகளை மேற்கொள்ள கயந்திகா மற்றும் அவரது பயிற்சியாளர் சஜித் ஜயலால் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி இலங்கை அணியை பிரதிநிதித்துவம் செய்து அருண தர்ஷன (ஆடவருக்கான 400 மீ.), காலிங்க குமாரகே, பபசர நிக்கு, தினுக்க தேஷான், ராஜித ராஜகருணா, பசிந்து கொடிகார, அருண தர்ஷன (ஆண்களுக்கான 400 மீ. அஞ்சலோட்டம்) மற்றும் டில்ஹானி லேகம்கே (பெண்களுக்கான ஈட்டி எறிதல்) ஆகியோர் இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை இதுவரை இரண்டு பதக்கங்களை வென்றுள்ளது. 1997 இல் கிரேக்கத்தில் நடந்த போட்டியில் சுசந்திகா ஜயசிங்க 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் 2003இல் ஒசாகாவில் நடந்த அதே போட்டி நிகழ்ச்சியில் வெண்கலப் பதக்கமும் வென்றார்.

## மெஸ்ஸி பாதம் பட்ட புல் விற்பனைக்கு



பிரபல கால்பந்து வீரர் லியொனல் மெஸ்ஸி பாதம் பதித்துச் சென்ற புல்தரை விற்பனைக்கு வந்துள்ளது.

சீனாவின் பீஜிங் நகருக்கு மெஸ்ஸி கடந்த ஜுன் மாதம் சென்றிருந்தார். ஜுன் 15 ஆம் திகதி அர்ஜன்டீனாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே நட்புமுறை ஆட்டம் நடைபெற்றது. பீஜிங் வேக்கர்ஸ் விளையாட்டரங்கில் நடந்த ஆட்டத்தில் மெஸ்ஸி பங்கேற்றார். அப்போது மெஸ்ஸி ஆடி ஓடி விளையாடிய அவரது பாதம் பதிந்த புல் தரையைக் கூறு போட்டு நினைவுப் பொருளாக விற்பனை செய்ய, அரங்கம் முடிவெடுத்துள்ளது.

வெட்டி எடுக்கப்பட்ட ஒரு பகுதிப் புல் தரைக்குச் சுமார் 69 டொலர் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலில் அத்தகைய 100 பகுதிகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. அவற்றை வாங்க விருப்பம் உள்ளோர் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்கேற்க வேண்டும்.

புல்தரையைக் கூறுபோட்டு விற்கும் விளையாட்டரங்கத்தின் செயலை, இணையவாசிகள் சிலர் சாடியுள்ளனர். ஆனால் சிலரோ, “அரங்கின் புல்தரையை அவ்வப்போது மாற்றத்தான் வேண்டும். அதை வீணாக்காமல் விற்று வருமானம் பார்க்கலாமே” என்று கூறி ஆதரவு தெரிவித்தனர்.

## நீளமான தாடி வைத்து பெண் உலக சாதனை



அமெரிக்காவின் மிச்சிகனைச் சேர்ந்த 38 வயது பெண் ஒருவர் உலகில் நீண்ட தாடியுடன் வாழும் பெண் என கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தாடி வளர்த்து வரும் எரின் ஹரிகட் என்ற அந்தப் பெண்ணின் தாடி 29.9 செ.மீ. நீளமுடையது என்று கின்னஸ் சாதனை புத்தகம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக அமெரிக்காவின் விவியன் வீலர் என்ற 75 வயது பெண்ணின் 25.5 செ.மீ. நீளமான தாடியே சாதனையாக இருந்தது.

மரபணு சமநிலையின்மை பிரச்சினைக்கு சிகிச்சை பெற்ற நிலையில் ஹரிகட்டின் முகத்தில் தாடி வளர ஆரம்பித்தது. பலமுறை அகற்றியும் தாடி வளர்ந்ததால் ஒரு கட்டத்தில் அவர் தாடியை அகற்றுவதை நிறுத்தியுள்ளார். எனினும் ஹரிகட்டுக்கு 13 வயதிலேயே தடி வளர ஆரம்பித்த நிலையில் அதனை மறைக்க அவர் முன்னர் ஒரு நாளைக்கு மூன்று முறை அதனை அகற்றியுள்ளார்.

பாக்டீரியா தொற்று காரணமாக அவரது கால்களில் ஒன்றின் கீழ் பாதி துண்டிக்கப்பட்டது உட்பட, ஹரிகட்டுக்கு குறிப்பிடத்தக்க உடல்நலப் போராட்டங்கள் இருந்தபோதிலும் இந்த சாதனையை படைத்துள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# கோவில் இடிந்து 9 பேர் பலி



இந்தியாவின் வட மாநிலமான ஹிமாச்சல் பிரதேசத்தில் கடும் மழை காரணமாக பண்டைய ஹிந்து கோவில் ஒன்று இடிந்ததில் குறைந்தது ஒன்பது பேர் கொல்லப்பட்டிருப்பதோடு பலரும் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பிரபல சுற்றுலா நகரான சிம்லாவில் இருக்கும் இந்தக் கோயில் நிலச்சரிவில் சிக்கிய நிலையில் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஹிமாச்சல் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளுக்கு காரணமாகியுள்ளது. மழையுடன் தொடர்புபட்ட விபத்துகளில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது இருபத்து ஒரு போர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கோவில் இடிபாடுகளில் 20 தொடக்கம் 25 பேர் வரை சிக்கி இருக்கலாம் என்று அந்த மாநில முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுக்கு தெரிவித்துள்ளார்.

## கம்போடியாவில் பல்லாயிரம் வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு



வடகிழக்கு கம்போடியாவில் உள்ள உயர் பாடசாலை ஒன்றில் ஆயிரக்கணக்கான வெடிக்காத வெடிபொருட்கள் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கம்போடியாவில் நீடித்த கொடிய உள்நாட்டுப் போர் முடிவுற்று 48 ஆண்டுகள் கடந்தபோதும் அந்த நாடு உலகில் அதிகம் கண்ணிவெடி புதைக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

கரடி மாகாணத்தில் உள்ள இந்த குயீன் கொசமக் உயர் பாடசாலை ஓர் இராணுவ முகாமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கிருந்து எடுக்கப்பட்டிருக்கும் துருப்பிடித்த கைக்குண்டுகள் மற்றும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் என வெடிபொருட்கள் வரிசையாக வைக்கப்பட்டிருப்பது அங்கிருந்து எடுக்கப்பட்ட படங்கள் காட்டுகின்றன. கடந்த மூன்று நாட்களில் 2,000க்கும் அதிகமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக கம்போடிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளர் நாயகம் ஹெங் ரடானா தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் தோட்டப்பகுதியை விரிவுபடுத்தும்போதே இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டாதகவும் அவர் தெரிவித்தார்.

கம்போடியாவின் எட்டு ஆண்டு சிவில் யுத்தம் 1975 ஆம் ஆண்டு முடிந்தபோதும் அதன் பாதிப்பு இன்றும் இருந்து வருகிறது.

## ஈரான் புனிதத் தலத்தில் சூடு: ஒருவர் உயிரிழப்பு



ஈரானின் ஷிராஸ் நகரில் உள்ள ஷியா முஸ்லிம் புனிதத் தலம் ஒன்றில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

ஷாஹ் செராக் அடக்கஸ்தலத்திற்குள் துப்பாக்கிதாரி நுழைய முயன்ற நிலையில் அங்கு வந்திருப்பவர்கள் மீது சூடு நடத்தியதாகவும் பின்னர் தாக்குதல்தாரி முறியடிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் இர்னா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்த புனிதத் தலத்தில் கடந்த ஒக்டோபர் 13 ஆம் திகதி இஸ்லாமிய அரசு குழு உரிமை கோரிய தாக்குதல் ஒன்றில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டனர். தற்போது இடம்பெற்றிருக்கும் தாக்குதலுக்கு எந்தத் தரப்பும் உரிமை கோரவில்லை. இந்த புனிதத் தலத்தில் ஏழாவது ஷியா இமாம் மூஸா அல் கதீமின் இரு மகன்களின் அடக்கஸ் தலங்கள் உள்ளன.

## சீனாவுக்கு உளவு தகவல் வழங்கிய இருவர் கைது



சீன உளவுத்துறை உத்தியோகத்தர்களுக்கு இராணுவ இரகசியங்கள் மற்றும் முக்கியமான தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டில் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பசுபிக் கடற்படைத் தளமான சண்டியாகோவில் தரித்து நிற்கும் எசெக்ஸ் தாக்குதல் கப்பலில் பணியாற்றும் பெட்ரிக் வெய் மற்றும் வென்ஹெங் ஜாவோ என்ற இருவரே கைதாகியுள்ளனர்.

உளவுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள வென்ஹெங் ஜாவோ அமெரிக்க இராணுவத்தின் முக்கிய தகவல்களை வழங்கி இலஞ்சம் பெற்றுள்ளதாகவும் பெட்ரிக் வெய் தேசிய பாதுகாப்பு குறித்த முக்கிய தகவல்களை தவறாகப் பயன்படுத்தியுள்ளதாகவும் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானின் ஒகினாவாவில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள ரேடார் அமைப்பின் மின் வரைபடங்கள் அடங்கலான படங்கள், இந்து–பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவப் பயிற்சிக்கான செயல்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல தகவல்களை வென்ஹெங் ஜாவோ வழங்கியுள்ளதாக விசாரணை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.